538

M. 2330

'SIDDHANTHAM'
Vol. 24 – No. 12

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 24 | கர மார்கழி 1951 டிசம்பர் | இதழ் 12

உள்ளுறை — பக்கம்

1. காட்டு ஒலி ... 497
2. திருவிற்கோலம் ... 502
3. மலேயாவில் சைவம் ... 5[illegible]6
5. இளங்கோவும் சமயங்களும் ... 5[illegible]8
6. சென்னைக் கண்காட்சிச்சாலையில் திருவுருவங்கள் ... [illegible]15
7. சங்கரப் பாடியார் ... 517
8. தலைவர் உரை ... 523
9. சைவத் தேர்வு விளுக்கள் ... 535
சமாஜ வரவேற்புக் குழு ... 539

OF THE REGISTRAR OF

JL
R673m2-11, N28
N81·24·12
186876

...ம். இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்.
...ர் : வித்வான் - வை. குஞ்சிதபாதம் பிள்ளை
... சித்தாந்த மகா சமாஜம்
...தலி தெரு, வேளாளதேனும்பேட்டை, சென்னை

# “சித்தாந்தம்” வி. பி. அறிக்கை

1. “ சித்தாந்தம் இருபத்து நான்காவது மலர் இந்த இதழோடு முடிவடைகிறது. ஜனவரி௴ முதல் 25-வது மலர் தொடங்கும். 25-வது மலரின் கையொப்பத் தொகை ரூபா மூன்றையும் ஒவ்வொருவரும் 1951௵ டிசம்பர்௴ 31உக்குள் மகாசமாஜக் காரியதரிசிக்குக் கிடைக்கும்படி மணியார்டர் செய்துவிட வேண்டும். தனித்தனியோ அல்லது ஒரே ஊரிலிருக்கும் பல சந்தாதாரர்கள் சந்தாத் தொகையைச் சேர்த்தோ அனுப்பும்போது மணியார்டர் கூப்பனிலாவது தனியே கார்டு மூலமாவது தங்கள் பெயர், விலாசம், சந்தா எண் முதலிய விவரங்களைத் தெளிவாக எழுதித் தெரிவிக்க வேண்டும்.

2. 1951௵ டிசம்பர் 31உக்குள் 25-வது மலரின் கையொப்பத் தொகையைச் செலுத்தாத சந்தாதாரர்கட்கு அம்மலரின் முதல் இதழ் வி. பி. மூலம் அனுப்பப்படும். அவ்வாறு வி. பி. அனுப்பிப் பெற்றுக் கொள்வதனால் ஒவ்வொரு சந்தாதாரருக்கும் வி. பி. ரிஜிஸ்தர் தபாற்கூலி வீண்நஷ்டமாகும்.

3. சில நண்பர்கள் வி. பி. வருங்காலத்தில் பெற்றுக்கொள்ளாது மற்றொருமுறை வரும்படியாகத் தபாற்காரனுக்கு அறிவித்து விடுகிறார்கள். பிறகு தபாற்காரன் வி. பி. யைச் சில நாள் வைத்திருந்து “not claimed” (வேண்டப் படவில்லை) என்று, குறித்துச் சமாஜத்துக்குத் திருப்பிவிடுகிறான். இதனால் சமாஜத்துக்கு வி. பி. செலவு நஷ்டமாகிறது. இவ்வாறு வி. பி. திருப்பப்பட்ட சில நாட்களுக்குள் அந்த வி. பி. யைப் பெறவேண்டிய சந்தாதாரர் தாம் ஏதோ காரணம் சொல்லி மீண்டும் பத்திரிகையை அனுப்பும்படி கடிதம் எழுதுவது வழக்கமாக யிருக்கிறது.

4. ஆகையால் அன்பர்கள் தயைசெய்து சமாஜத்துக்கு வீண் கஷ்டமும் நஷ்டமும் தராமல் அடுத்தமலருக்குரிய கையொப்பத்தை முன்னதாகவே அனுப்பி வைப்பது பெருபகாரமாகும் என்று நமது சந்தா நேயர்களுக்கு அறிவிக்கிறோம்.

5. பணம் அனுப்பும் ஒவ்வொருவரும் தமது முழுப்பெயர், விலாசம், சந்தா எண் ஆகிய விவரங்களைத் தெரிவித்தல் அவசியமாகும்.

6. இவ்வாண்டு பத்திரிகையைத் தருவிக்கும் ஒவ்வொரு நேயரும் புதிதாகப் பல சந்தாதாரரைச் சேர்த்துத் தரல் வேண்டுகிறோம். அல்லது ஒரு சந்தாதாரரையேனும் அடுத்த ஆண்டுக்குச் சேர்த்து அவர் கையொப்பத்தையும் சந்தா தொகையையும் 1951௵ டிசம்பர்௴ 31உக்குள் சமாஜக் காரியதரிசிக்கு அனுப்பி உபகரிக்க விரும்புகிறோம்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின்

திங்கள் தமிழ்த் தாள்

மலர் இருபத்துநான்கு

1951

REGISTRAR OF BOO
ADRA

தாளாசிரியர் :

திரு. C. M. இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்.

உதவித் தாளாசிரியர் :

வித்வான் - வை. குஞ்சிதபாதம் பிள்ளை

சைவ சித்தாந்த மகாசமாஜம்

40, முத்தையா முதலித் தெரு,

வேளாள தேனாம்பேட்டை, சென்னை-6.

உ

# உள்ளுறை

**பொருள்** **பக்கம்**


அம்மானை (முத்து-சு. மாணிக்கவாசக முதலியார்) ... 139
அறவாழ்வு (அ. தா. ப. திருஞானசம்பந்தன்) ... 325
ஆரூராரின் அருள் வாழ்க்கை அளவு யாது? (மா. சிவகுரு நாதபிள்ளை) ... 145
இதய ஒலி (ஆசிரியர்) ... 257
இரட்டியார் மணிவிழா வாழ்த்துப்பா (கோவைகிழார்) ... 396
,, (மயிலைகிழார்) ... 350
இலங்கை மகாநாட்டுத் தலைவர் உரை (சிவக்கவிமணி) ... 523
இல்லையேல் உண்டு (பஞ்சநதம்பிள்ளை) ... 342
இளங்கோவும் சமயங்களும் (ஞானசம்பந்தம்) ... 508
ஈழத்துக் கீழ்க்கரை நாட்டுக் கோயில்கள் (கோவைகிழார்) ... 209
உத்திரகோசமங்கை ,, ... 81
உயர்வுவேண்டும் (அழகுமதியன்) ... 225
உலகம் எல்லாம் (அ. அருளம்பலம்) ... 461
உள்ளுறை உவமம் (அழகுமதியன்) ... 385
ஐயவினா (முத்து-சு. மாணிக்கவாசக முதலியார்) ... 159
கவிஞர் கண்டநிலை (அ. தா. ப. திருஞானசம்பந்தன்) ... 92
கறையிழிவு (சிதம்பரம்-நாகரத்தின சுவாமிகள்) ... 136
காணிப்பாக்கம் (C. N. P. சாரதி) ... 118
காதலாகி வாழ்க (அ. தா. ப. திருஞானசம்பந்தன்) ... 410
குமாரகுருபரர் (ஆ. சிவகாமசுந்தரி அம்மாள்) ... 213
சங்கரப்பாடியார் (கே. எஸ். வைத்தியநாதன், பீ.ஏ.) ... 517
சங்ககாலத்து சிவபெருமான் (அ. மு. பரமசிவானந்தம்) ... 389
சர். பொன்னம்பலம் இராமநாதர் ஜயந்தித் திருவிழா (கோவை கிழார்) ... 198
சிவப்பிரகாசர் வேண்டுவன எவை? (அ. தா. ப. திருஞான சம்பந்தன்) ... 125



186876





சிவப்பிரகாசம் மூலமும் உரையும் (முத்து-சு. மாணிக்க வாசக முதலியார்) 380, 417, 1465
சிவபுராணம் ,, ... 172
சுந்தரர் குருபூஜை விழா (C. K. சுப்பிரமணிய முதலியார்)... 441
சும்மா இரு (ம. ரா.) ... 442
சூரியனார் கோயில் (கோவை கிழார்) ... 168
சென்னைக் கண்காட்சி ,, ... 515
செய்தித்திரட்டு ,, ... 494
சைவசித்தாந்தா மகாசமாஜம் ஆசியுரை (திருவண்ணாமலை ஆதினம் சின்னப்பட்டம் தேசிகர்) ... 23
,, ,, 45-ம் ஆண்டு அறிக்கை (செயலாளர்)... 14
சைவ சித்தாந்த சமாஜ ஆண்டு விழா (G. கல்யாணம் M.A., D.Econ.) ... 17
,, சமாஜ சைவ மங்கையர் மாநாட்டுத் தலைமையுரை (R. இராஜரத்தின அம்மையார்) ... 1-16
சைவ சித்தாந்த சமாஜ சித்தாந்தக் கோடை வகுப்பு (செயலாளர்) ... 398
,, மாநாட்டுத் தலைமைப் பேருரை (ச. சச்சிதானந்தம் பிள்ளை) 25, 33
,, போஷகர், ஆயுள் சந்தாதாரர் (செயலாளர்) ... 489
,, சைவர் மாநாட்டு வரவேற்புரை (இராஜகுமார். காசிநாததுரை—முகவை) ... 1
,, அவையினரை வரவேற்றல் (வரவேற்புக் கழகம்)... 13
,, வாழ்த்துப்பா , ... 12
சைவத் தேர்வு வினாக்கள்—1949 ... 535
“ சைவநீதி ” (செ. சின்னத்துரை, B. A. யாழ்ப்பாணம்)... 120
தஞ்சாவூர் தட்டான் திறம் (முத்து-சு. மாணிக்கவாசக முதலியார்) ... 476
“ தமக்கும் உண்டு ” (C. K. சுப்பிரமணிய முதலியார்) ... 428
தமிழ் எழுத்துத் திருத்தம் (மா. ரா.) ... 376
தமிழரசி கொலுவிருக்கை ,, ... 241
தவம் (அழகுமதியன்) ... 471

"தாயும் சேயும்" (அ. தா. ப. திருஞானசம்பந்தன்) ... 228
தாவாரம் இல்லை தனக்கொரு வீடில்லை (வித்துவான்-பொ. இரத்தினம்) 102, 154
திருக்காளத்தி (கோவைகிழார்) ... 407
திருக்குறளில் சில அறிய கருத்துக்கள் (புரிசை-முருகேச முதலியார்) ... 113
திருமயிலை (கோவைகிழார்) ... 457
திருமுறைப் பெருவிழாக் காட்சி (அதன் செயலாளர்) ... 480
திருமூலர் மந்திரமும், மெய்கண்டார் சிவஞான போதமும் (திடிசை கிழார்) 250, 296, 345
திருவிற்கோலம் (கோவைகிழார்) ... 502
திருவெண்பாக்கம் ,, ... 362
தாய்மைஉணவு (ஆசிரியர்) ... 199
நாட்டொலி ,, 305, 353, 401, 449, 497
நின்ற இருந்த கிடந்த நிலைகள் (அழகுமதியன்) ... 247
நெஞ்சே உனக்கே உபதேசம் (அ. தா. ப. திருஞானசம்பந்தன்) ... 65
பண்டைச் சைவர் கல்வி முறை (Dr. மா. இராசமாணிக்கம் M.A., L.T., M.O.L.) ... 432
பண்பு நெறியும் சமயவாழ்வும் (அ. தா. ப. திருஞான சம்பந்தன்) ... 364
பாவமும் அறமதாகும் (வித்துவான் செ. வெங்கடராமச் செட்டியார்) ... 334
பொல்லாதவன் நெறிநில்லாதவன் (அ. த. ப. திருஞான சம்பந்தன்) ... 75, 84
மதிப்புரை (ஆசிரியர்) 79, 109, 160, 445, 493
மலேயாவில் சைவம் (ம. ரா.) ... 506
மலை விளக்கு (அ. தா. ப. திருஞானசம்பந்தன்) ... 161
மான் (முத்து-சு. மாணிக்கவாசக முதலியார்) ... 86
முற்காலப் பெண்டிர் கல்வி (S. சிவராம சீதாபாய்) ... 183
வெறுக்கவா போற்றவா (ம. ரா.) ... 237
வேந்தும் வேடும் (முத்து-சு. மாணிக்கவாசக முதலியார்) ... 70


சாது அச்சுக்கூடம், சென்னை

Reg. M. 2330

உ

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 24 | கர மார்கழி 1951 டிசம்பர் | இதழ் 12

## நாட்டு ஒலி

### அற நிலையங்கள்

(தொடர்ச்சி)

5. மடங்கள் : மடங்களின்மீது அடியிற்கண்ட அதிகாரங்கள் இந்தச் சட்டத்தின்படி அரசியலுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 1. வழக்குகள் : கமிஷனரோ அல்லது அவரால் எழுத்து மூலமாகவோ அதிகாரம் பெற்ற இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட அபிமானிகளோ ஒரு மடம் அல்லது மடத்திற்குச் சேர்ந்த கட்டளை இவைகளின்மீது வழக்கு செய்து தீர்ப்புப் பெறலாம். அவ்வழக்குக்குக் காரணங்கள் மடத்துத் தலைவன் (1) பைத்தியம் பிடித்துள்ளான் (2) தன் காரியத்தைச் செய்யமுடியாத அளவு உடல் ஊனம் பெற்று இருக்கிறான். (3) இந்து சமயத்தையாவது மடத்துக் கொள்கைகளையாவது விட்டிருக்கிறான் (4) ஒழுக்கத்திற்கு எதிராகக் குற்றம் செய்து தண்டனை பெற்றிருக்கிறான், (5) மடத்தின் சொத்தை துரோகம் செய்து அபகரித்திருக்கிறான், (6) சட்டப்படி கடமைகளைச் செய்வதில் வேண்டுமென்று தவறு செய்கிறான் என்ற காரணங்களுக்காக தர்மகர்த்தாக்களை நீக்கத் தீர்ப்புப் பெறலாம்.

அபிமானிகள் கமிஷனரிடம் வழக்கு செய்ய அனுமதி கோரி மறுக்கப்பட்டால் அந்தத் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள்ளாக அரசாங்கத்தாருக்கு அப்பீல் செய்து கொள்ளலாம்.

**2. ஸ்தானங்கள் :** மடத் தலைமையிலாவது கட்டளை தர்மக்கர்த்தா வேலையிலாவது ஸ்தானம் காலியானல் அடுத்த வார்சு யார் என்று வழக்கு ஏற்பட்டுக் கூடிய விரைவில் வார்சு நியமிக்க முடியாவிட்டாலும் வார்சுமைனராய் இருந்தாலும் தலைவர் புத்தி சுவாதீனம் இல்லாமல் போனாலும் அந்த இடத்து அஸிஸ்டெண்ட் கமிஷனர் தற்காலிகமாக காரியம் நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யலாம். கமிஷனரும் அதைப் பற்றித் தகுதியான ஏற்பாடுகளும் செய்யலாம். அப்படிச் செய்வதில் மடத்தின் சீடர்களின் உரிமைகளை அனுசரிக்க வேண்டும்.

**3. செலவுத் திட்டம் :** மடத்துத் தலைவரோ அல்லது கட்டளைத் தர்மகர்த்தாவோ மடத்தினுடைய செலவுத் திட்டத்திற்குச் செய்யவேண்டிய காரியங்களுக்கு ஒரு அறிக்கை எழுதி கமிஷனருக்கு அனுப்பவேண்டும். அவ்வறிக்கையைப் பொதுமக்களின் பார்வைக்கும் வெளியிட வேண்டும். அதன் பேரில் கமிஷனர் விசாரித்து அத் திட்டங்களைத் திருத்தி அரசாங்கத்திற்கு அனுப்பலாம். அரசாங்கம் முடிவான உத்திரவு ஏற்படுத்தும்.

**4. பாத காணிக்கை :** மடத்தலைவருக்குப் பாதகாணிக்கையாகக் கிடைக்கும் பொருளைச் செலவழிக்கலாம். ஆனல் அவைகளைப் பற்றிய கணக்குகளைக் கமிஷனருக்கு ஒப்புவிக்கவேண்டும்.

**5. மேனேஜர் நியமனம் :** ஒரு மடத்தலைவர் கமிஷனர் விரும்பினல் அம்மடத்தின் சமயமற்ற வேலைகளுக்கு ஒரு மேனேஜரை நியமிக்கலாம். தலைவன் நியமிக்கத் தவறினல் கமிஷனரே நியமிக்கலாம். அவ்வாறு நியமிக்கப்பட்ட மேனேஜர் தலைவரின் கீழ் வேலை செய்யவேண்டும். கமிஷனருக்கு அவ்வப்போது கணக்குக்களை அனுப்பவேண்டும்.

**6. விசாரணைகள் : 1. டிப்டி கமிஷனர் அதிகாரங்கள் :** டிப்டி கமிஷனர் அடியிற் கண்ட விசாரணைகளைச் செய்யலாம். 1. ஒரு நிலையம் சமய நிலையமா என்பது ? 2. ஒரு நிலையத் தலைமை பரம்பரையானதா ? 3. ஒரு சொத்தோ பணமோ சமய சம்பந்தமானதா ? 4. ஒரு சொத்தோ பணமோ கட்டளையா ? 5. ஒரு நபருக்கு ஒரு கௌரவம் மரியாதை முதலியவைகள் வழக்கப்படி உண்டா ? 6. ஒரு நிலையமோ கட்டளையோ சமய சம்பந்தப்பட்டதா அல்லது வேறுவிதமானதா ? அல்லது இரண்டும் கலந்ததா ? 7. அவ்விதம் கலந்திருந்தால் ஒவ்வொன்றிற்கும் எத்தனை பங்கு என்ற கேள்விகளை விசாரித்துத் தீர்ப்புச் சொல்லலாம்.



**2. ஸ்கீம் ஏற்படுத்துதல் :** ஒரு சமய நிலையம் சரியாகப் பரிபாலனம் செய்ய வேண்டியதற்காக ஒரு ஸ்கீம் ஏற்படுத்த வேண்டும் என்று ஒரு டிப்டி கமிஷனர் நம்பினலும் ஐந்து பேர் அபிமானிகள் அதே விஷயத்திற்காக எழுத்து மூலமாக விண்ணப்பம் செய்துகொண்டாலும் அந்த டிப்டி கமிஷனர் தர்மகர்த்தாக்கள் ஏரியாக் கமிட்டி இவர்களை ஆலோசனை கேட்டுப் பிறகு ஸ்கீம் அவசியம் என்று தோன்றினல் ஒரு பரிபாலன ஸ்கீம் ஏற்படுத்தலாம். அந்த ஸ்கீமில் தர்மகர்த்தாக்களை நீக்குதல், புது தர்மகர்த்தாக்களை நியமித்தல், தர்மகர்த்தாக்களின் உரிமை கடமைகளை வரையறைப் படுத்துதல், நிர்வாக அதிகாரியை நியமித்தல் முதலிய விதிகளை ஏற்படுத்தலாம்.

ஆனல், ஒரு மடத்தைப் பற்றி ஸ்கீம் ஏற்படுத்தினல் தலைவரோடு ஒருவரையோ அல்லது அதிகமானவரையோ அவர்களுடன் சேர்ந்து பரிபாலிக்க நியமனம் செய்தும் அல்லது ஒரு நிர்வாக அதிகாரியைநியமித்தும் இவர்களுக்குள்ள உரிமைகளை வரையறைப்படுத்தியும் தீர்ப்புச்சொல்லலாம். அவ்வாறு செய்யும்போது அந்த நிலையங்களுக்குச் சேர்ந்த சொத்துக்கள் இன்னவை என்று தீர்மானிக்கவேண்டும்.

முன்னர் ஏற்பட்டிருக்கும் ஸகீம்களை ரத்து செய்யவோ மாற்றவோ டிப்டி கமிஷனருக்கு அதிகாரம் உண்டு.

**3. வருமானப் பிரிவினை :** யாதாவதொரு நிலையத்தின் நோக்கங்கள் நடத்த முடியாமல் போகும் பட்சத்தில் டிபுடி கமிஷனர் அவைகளின் வரும்படிகளை அடியிற்கண்ட செலவுகளுக்கு மாற்றலாம். (1) நிலையத்தின் சமயக் கொள்கைகளைப் பிரசாரம் செய்தல் ; (2) பல்கலைக்கழகம் கல்லூரி முதலியவைகளை ஸ்தாபித்து இந்து சமயம் தத்துவம் சிற்பம் முதலியவைகளைக் கற்பிப்பதற்காக ஏற்பாடு செய்தல் ; (3) இந்து சமயத்தைக் கற்பிக்கும் கல்வி நிலையங்களை ஏற்படுத்தி ஆதரித்தல்; (4) வடமொழி உள்பட இந்திய மொழிகளின் அபிவிருத்தியை மேம்படுத்தல் ; (5) இந்தியச் சிற்பம் நற்கலைகள் முதலியவைகளை கற்றுக் கொடுத்தல் ; (6) இந்துக்களுக்கு அனதை ஆசிரமங்கள் வைத்தல் ; (7) குஷ்ட

ரோக நிவாரணவிடுதிகள்; (8) இந்து அனாதைகளுக்கு ஏழை விடுதிகள் ; (9) இந்துக்களுக்காக வைத்தியசாலைகள் ; (10) பணம் இல்லாத மற்ற சமயநிலையங்களுக்கு உதவி இவ்வாறு செலவழிப்பதில் பணவருவாய் தரும் நிலையத்தின் கொள்கைகள் கொண்ட பிரிவுகளுக்குச் சிறப்பாக உதவி செய்யவேண்டும். இப்படிச் செய்யும் உத்தரவுகள் பகிரங்கமாக வெளியிடப்பட வேண்டும்.

4. நின்றுபோன அல்லது அழிந்த நிலையங்கள்:—யாதாவது ஒரு நிலையம் தன் காரியங்களைச் செய்யாமல் அழிந்து போனால் டிபுடி கமிஷனர் விசாரணை செய்து அதனுடைய சொத்துக்களை இன்னது என்று தீர்மானித்தும் ஒரு தர்மகர்த்தாவை நியமித்தும் சொத்துக்களை வசப்படுத்தும்படி உத்திரவிட்டும் அந்நிலையத்தை மறுபடியும் ஸ்தாபிக்கவோ அல்லது மேல் பிரிவில் சொன்ன காரியத்திற்கு உபயோகப்படுத்தவோ உத்திரவு இடலாம். அவ்விதம் உத்திரவிடுவதில் ஏதாவது ஒரு சொத்தைச் சுவாதீனப்படுத்தவும் அதைச் சமய ஆராதனைக்கு உபயோகப்படுத்தவும் கட்டளை இடலாம்.

இப்படி இடும் உத்திரவுகளின் பேரில் கமிஷனருக்கு அப்பீல் அதிகாரம் உண்டு.

அதில் பாதிக்கப்பட்ட எவரும் 90 நாட்களுக்குள்ளாக கோர்ட்டில் பிராது செய்து கொள்ளலாம்.

7. உத்திரவிடப்பட்ட சமயநிலையங்கள் : ஒழுங்காக நடைபெருத சமய நிலையங்களைக் குறித்துக் கமிஷனர் அவர்கள் விசாரணை செய்து அவைகளை 'உத்திரவிடப்பட்ட சமய நிலையங்கள்' என்று தீர்மானிக்கலாம் (Notified).

1. வெறும் நிலையங்களோ அல்லது ஸ்கீம் உள்ள நிலையங்களோ எவையாலும் ஒழுங்காக நடைபெருவிட்டால் அவைகளை 'உத்திரவிடப்பட்டவை'களாகத் தீர்ப்புச் சொல்லக் கமிஷனருக்கு அதிகாரம் உண்டு. தீர்ப்புக்கு முந்தி நோட்டீஸ் விட்டு விசாரணை செய்து அரசாங்கப் பத்திரிகையில் அறிக்கையிட்டுப் பிறகு உத்திரவு இட வேண்டும். அவ்விதம் செய்யும் உத்திரவு ஐந்து வருடங்களுக்கு அமுலில் இருக்கும். அப்படிப்பட்ட நிலையங்களுக்கு ஸ்கீம் ரத்து ஆகும். கமிஷனர் ஒரு நிர்வாக அதிகாரியை நியமித்து அவ்வதிகாரியின் சம்பள விகிதங்களை நிச்சயப்படுத்துவார். அவ்வதிகாரியின் அதிகாரங்களை



ஒழுங்குபடுத்துவார். அவ்வதிகாரியை விலக்கவும் நீக்கவும் கமிஷனருக்கு அதிகாரம் உண்டு. இவ்வாறு உத்திரவிடப்பட்ட நிலையங்களின்பேரில் ஏரியா கமிட்டிகளுக்கு அதிகாரம் இல்லை.

8. கணக்குகள் : (1) சமய நிலையங்களைப் பற்றி வைக்கவேண்டிய கணக்குகளை வைக்கவேண்டியதுபற்றி அடியிற்கண்ட விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. (2) ஒவ்வொரு சமய நிலையத்துத் தர்மகர்த்தாவும் மார்ச்சு மாதத்திற்கு முந்தி வரவுசெலவுத் திட்டத்தை எழுதி ஏரியா கமிட்டிக்கும் கமிஷனருக்கும் அனுப்பவேண்டும். அதில் செலவுத் திட்டம், கொடுக்கவேண்டிய பாக்கிகள், கட்டடங்களின் திருப்பணிகள் செப்பனிடல் முதலியவை குறிப்பிட வேண்டும். அவைகளுக்குப் பணங்களை ஒதுக்கி வைக்க வேண்டும். கட்டட செலவுகளுக்கு வருமானத்தில் 10 சதத்திற்குக் குறையாமலும் மூவாயிரத்துக்கு அதிகமாகாமலும் செலவிடலாம். அவ்விதம் அனுப்பும் வரவு செலவுத் திட்டத்தைத் திருத்தவும் மாற்றவும் ஏரியா கமிட்டிக்கும் கமிஷனருக்கும் அதிகாரம் உண்டு. தர்மகர்த்தாக்கள் கணக்குகளை ஒழுங்காக வைக்கவேண்டும். அக்கணக்குகளைப் பரிசோதனை அதிகாரிகள் பரிசீலனை செய்யவேண்டும். ஆண்டுக்கு ஒரு முறை பரிசோதனை அறிக்கை அந்தந்த அதிகாரிகளுக்கு அனுப்பப்பட வேண்டும். குற்றம் குறைகளுக்குத் தர்மகர்த்தாக்கள் பதில் கூறவேண்டும். குற்றம் குறைகள் நிவர்த்தி செய்யாமல் போனால் தர்மகர்த்தாக்கள் அதனால் ஏற்படும் நஷ்டங்களுக்குச் சொந்தப் பொறுப்பில் சவாப் சொல்லவேண்டும். இதற்கு மேல் கோர்ட்டாருக்கு விசாரணை செய்து ஒப்புக்கொள்ளவோ தள்ளவோ அதிகாரம் உண்டு. (3) வருமானம் : சமய நிலையங்கள் சர்க்காருக்குத் தங்கள் வரும்படியிலிருந்து ஐந்து சதத்திற்குக் குறையாமல் வரி கொடுக்கவேண்டும். 1000-க்குக் குறையாத வரும்படி உள்ளவைகள் கணக்குப் பரிசோதனைக்காக 1½ சதவீதம் வரி கொடுக்க வேண்டும். மேலே கண்ட வருமானத்திலிருந்து அரசியலார், கமிஷனர், டிபுடி கமிஷனர் முதலிய எல்லா அதிகாரிகளும் சம்பளம் முதலியவைகளைப் பெறவேண்டும். கச்சேரிகளில் [illegible] செலவுகளை அந்தந்தச் சமயநிலையம் அ[illegible]டும்.

அரசாங்கத்திற்கு வரவேண்டிய வரவுகளைத் தர்மகர்த்தாக்கள் கொடுக்கத் தவறினால் ஜில்லாக் கலெக்டர் நிலையங்களின் சொத்துக்களிலிருந்து வசூல் செய்யலாம்.

9. **மற்றவிதிகள் :** 1. திருமலை திருப்பதி தேவஸ்தானங்களுக்குத் தனிமையாக விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவைகளைப்பற்றி இங்கே விவரிக்க வேண்டியதில்லை. 2. நிர்வாக விஷயமாகப் பல விஷயங்கள் பல சிறப்பு விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவைகளில் சில முக்கிய விதிகளைப் பற்றி மாத்திரம் இங்கே குறிப்பிடுவோம் :—(1) சமய நிலையங்களைப் பற்றி அறிய வேண்டிய செய்திகளைச் சமயஅதிகாரிகள் (நால்வகைப்பட்ட அதிகாரிகள்) மற்ற அரசியல் பகுதிகளிலிருந்து அறிந்து கொள்ளலாம். (2) சமய நிலைய அதிகாரிகள் தம் அதிகாரத் தோரணையில் சுவாதீனமோ அல்லது வேறு அதிகாரமோ செலுத்தும்போது அரசியல் பகுதியாளர்கள் அதற்கு உதவி செய்யவேண்டும். (3) கச்சேரி செலவுகள் அந்தந்த நிலையங்களிலிருந்து வசூல் செய்துகொள்ள அதிகாரம் உண்டு. தர்மகர்த்தாக்கள் உத்திரவுகளுக்கு மீறி நடந்தால் 200 ரூபாய்க்கு மேற்படாமல் அபராதம் விதிக்கப்படலாம். (4) இந்தச் சட்டத்திற்கு மீறி கச்சேரிகளில் வழக்குகள் தொடங்க முடியாது. கமிஷனர் முதலியவர்கள் செய்யும் உத்திரவின் பேரில் கச்சேரிகளுக்கு அதிகாரம் இல்லை. (5) கமிஷனர் முதலிய அதிகாரிகளின் ரிக்கார்டுகளை அரசியலார் பரிசோதிக்கலாம். இந்தச் சட்டத்திற்கு விரோதம் இல்லாமல் உபவிதிகளை அரசியலார் ஏற்படுத்தலாம்.

மேற்சொல்லிய விதிகளே யன்றி இச் சட்டத்தின்படி தொடுக்கும் விண்ணப்பங்கள், வியாஜ்ஜியங்கள் முதலியவைகளுக்குக் கட்டவேண்டிய கோர்ட்டு பீஸ் ஸ்டாம்பு விகிதங்கள் அனுபந்தத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

---

## 2. தலப்பகுதி

# திருவிற்கோலம்

**( கோவைகிழார் )**

1. இடம் : இது தற்போது கூவம் என்று வழங்குகிறது. இவ்வூர் செங்கற்பட்டு வட்டத்தில் திருவள்ளூர் 



தாலுக்காவில் இருக்கிறது. கடம்பத்தூர் நிலையத்திலிருந்து தென்மேற்கே 5 கல் சென்றால் அடையலாம். ஆனால் சென்னையிலிருந்து நேர்மேற்கே பூவிருந்தவல்லி, கீழச்சேரி வழியாகச் செல்வதுதான் சுலபம். விசைவண்டி வசதி உண்டு. ஊர் சிறியது. கோயிலின் முன்னால் சந்நிதி வீதி அகலமாக இருக்கின்றது. ஊரில் கொண்டல் கட்டிச் சைவ வேளாளர்கள் மிகுதி. பலபேர் சென்னையிலே தவசிப்பிள்ளைகளாக அமர்ந்திருக்கின்றார்கள். இவ்வூரில் இசை அன்பர்களும் சிறப்பாக இருக்கிறார்கள். ஆலயப் பணிவிடையும் மிராசும் திருவிழா உரிமைகளும் அவர்களுக்கு உண்டு.

2. **கோயில் :** கருங்கற்றிருப்பணி. முன் கோபுரம் பூர்த்தியாகவில்லை. மற்றப் பகுதிகள் நன்றாக இருக்கின்றன. ஆலயத்திற்கு முன்னால் 16 கால் மண்டபம் விழாக் காலங்களில் மூர்த்திகள் எழுந்தருளுவதற்குப் பயன்படுகிறது. தெப்பக்குளம் இருக்கிறது. படிகள் நன்றாக இல்லை.

3. **மூர்த்திகள் :** மூலத்தான மூர்த்தி தீண்டாத் திருமேனி. அதிகமழை, மழையின்மை, யுத்தம் முதலிய சம்பவங்கள் சுவாமியின் திருமேனியில் அவ்வப்போது காணப்படும் நிறங்களிலிருந்து அறியப்படுமாம் என்று கயப்பாக்கம் செட்டியார் அவர்கள் குறித்திருக்கிறார்கள். இந்தச் செய்தி சம்பந்தர் அறிந்தே " ஐயன் அதிசயன் " என்று பதிகத்தில் 3-ம் பாடலில் குறித்திருக்கிறாராம். சுவாமியின் பெயர் திரிபுராந்தகேசுவரர். அம்மன் பெயர் - பையரவல்குல் அம்மை (திரிபுராந்தக நாயகி). அம்மன் திருவுருவம் 4 அடி உயரம் உள்ளது. நடராசர் 3 அடி உயரம். லிங்கோத்பவ மூர்த்தியின் அடியில் உள்ள வராக உருவம் மானிடஉடல் வராகச் சிரசுகொண்டது. துவாரபாலகர்கள் இரண்டு கைகொண்ட உருவங்கள். ஆகவே இவைகள் மிகப் பண்டைய உருவங்கள் என்று அறிய வேண்டும். அவர்களுள் கைச்சுட்டுவிரல் உள்ளே மூர்த்தியைக் காட்டி நிற்கின்றன.

4. **ஐதீகங்கள் :** திரிபுரசங்கார காலத்தில் சிவபெருமான் வில்லை ஏந்திய திருக்கோலத்துடன் வீற்றிருந்தமையால் இவ்வூர் திருவிற்கோலம் எனவும், இரதத்தின் கூவரம் (ஏர்க்கால்) உடைந்து நாசம் ஆயினதால் கூவம் எனவும்

பெயர்வந்தன என்று தலபுராணம் கூறும். சுவாமியின் நாமம் அந்தக் காரணத்தினுல் திரிபுராந்தகர் என்று வந்த தாம். சம்பந்தர் பதிகத்தில் 2-ம் பாடலில் "ஒரு சரத்தினுல் வெற்றி கொள் அவுணர்கள் புரங்கள் வெந்தறச் செற்ற வன் உறைவிடம் திருவிற்கோலமே" என்று வருதல் காண்க. மேலும் கூவம் என்றது 11-ம் பாடலில் கூகம் என வந்திருத்தல் காண்க.

" கூகம் மேவிய சேடன் செழுமதில் திருவிற்கோலமே. "

5. நூல்கள் : தமிழில் சம்பந்தர் பதிகம் உண்டு. சிவப் பிரகாச சுவாமிகள் பாடிய கூவப்புராணம் ஒன்று இருக் கிறது. அதில் சருக்கங்கள் 6-ம், பாடல்கள் 703-ம் இருக் கின்றன. இப்புராணப்படி சுவாமியின் பெயர் திருவிற் கோலப் பெருமான். அம்மையின் பெயர் பையரவல் குலம்மை என்பன. அடிமுடி தேடிய சருக்கத்தில் 40-வது செய்யுளில் சுவாமியின் திருநாமங்கள் 11 கூறப்பட்டுள் ளன. புராணத்தில் கூறியிருக்கும் மற்ற விஷயங்கள் தல மகிமை, திரிபுர தகனம், அடிமுடி தேடியது, செந்நெல் வைத்தது, தாருகன் வதை என்பன. சுவாமியின் திருப் பெயர்களில் ஒன்று செந்நெல் வைத்தார் என்பது. தரும சீலன் என்ற ஓர் அந்தணன் வறுமையுற்று அவனும் அவன் மனைவியும் 9 நாள் பட்டினியோடிருந்தும் விற்கோல நாதருக்குத் தவருது பூஜை செய்து நிகழ்த்தி வந்தான். ஒன்பதாவது நாள் தடுமாறிக்கொண்டு தொழுதிடப் போக ஒரு முதிய ஏழை எதிரே வந்து உணவு கேட்க அந்தணன் இறைவனை வணங்க இரண்டு நாழி நெல் தந்தார். அதைக் கொண்டு முதியவருக்கு அமுது செய்வித்தார். பிறகு ஒவ் வொரு நாளும் 2 நாழிகை நெல் கிடைத்தது. அதுகொண்டு அடியார்க்குத் திருவமுது செய்வித்தார். இதனுல் சுவா மிக்கு செந்நெல் வைத்த நாதர் என்று பெயர் வந்ததாம்.

6. கல்வெட்டுக்கள் : இக்கோயிலில் 30 கல்வெட்டுக்கள் உள்ளன. அவைகளில் 14 கல்வெட்டுக்கள் சோழர்கள் காலத்தவை. 6 கல்வெட்டுக்கள் விசயகண்ட கோபாலன் என்ற சிற்றரசனுடையவை. ஒன்று சம்புவராயன் என்ற சிற்றரசனுடையது. 4 விஜயநகரத்தார் காலத்தவை. மற் றவை வெவ்வேறு காலத்தவை. சோழர்கள் காலத்தில்



கல்வெட்டுக்களில் இராசராசச்சோழன் 1 இராஜேந்திரன் குலோத்துங்கன் (10, 11, நூ.) கல்வெட்டுக்கள் இருக்கின் றன. இக் கல்வெட்டுக்களிலிருந்து அடியிற் கண்ட சங் கதிகள் அறியலாம். சோழர்கள் காலத்தில் இந்த நாட்டின் பெயர் ஜயங்கொண்ட சோழ மண்டலம். அதில் மணவிற் கோட்டம் என்பது உள்நாடு. இக்கோட்டத்தின் தலைநகர் திருவாலங்காட்டிற் கருகில் உள்ள மணவில் ஆகும். இந்த உள்நாட்டின் கிளைநாடு கான்றூர் நாடு என்பது. அதில் உள்ள ஊர் கூவம் ஆகும். கூவம் நதிக்கும் கூவம் ஊருக் கும் இணைப்பு இல்லை. இரண்டிற்கும் சில கற்கள் தொலைவு உண்டு. 10, 12 நூற்றுண்டுகளில் கூவத்திற்கு மதுராந் தகநல்லூர் என்றும், தியாக சமுத்திர நல்லூர் என்றும் பெயர்கள் வழங்கின. கூவத்திற்கருகில் உள்ள பெரிய பாய்ச்சல் ஏரி அந்நாளில் திரிபுவன மாதேவிப் பேரேரி என்ற பெயரோடு விளங்கியது. அக்காலத்துச் சோழன் பட்டத்தரசியின் பேரில் வழங்கப்பட்டது. குலோத்துங்கச் சோழன் III 42-ம் ஆண்டில் இந்த ஏரியைப் பழுது பார்ப் பதற்காக நெல் தானமும் மீன்பாட்ட உரிமையும் தரப்பட்ட தாம். இவ்வூருக்கு அருகே திரிபுவன மாதேவி விளாகம் என்ற குக்கிராமமும் இருந்ததாம். இராஜேந்திர தேவன் (1052 - 63) காலத்தில் ஒரு கல்வெட்டு கூவத்துத் திரிபுவன மாதேவிப் பேரேரியிலிருந்து சோழ வித்தியாத புரச்சதுர் வேதி மங்கலம் என்ற கோட்டூர் வயல்களுக்கு ஒரு கால் வாய் வெட்டப்பட்டு அதன் வழியே பாய்ச்சல் அமைக்கப் பட்டதாம். குலோத்துங்கன் நாளில் கூவத்துத் திருவிற் கோலம் உடையார் கோயில் இரிஷப வாகனதேவர் சந்நிதி ஒன்று இருந்ததாம். மேலும் அந்நாளில் நான்கு கிராமத் தார்கள் ஒரே நிலத்தைக் குறித்து உரிமை பாராட்ட நான்கு சபையோரும் சேர்ந்து ஒரு தீர்மானம் செய்து அந்த நிலத்தைக் கோயிலுக்குத் தானம் செய்ததாகவும் அந்த முறையில் வழக்குத் தீர்ந்ததாகவும் கண்டிருக்கிறது. சகம் 1546 ஆண்டுக் கல்வெட்டில் அம்மனுடைய பெயர் பைய ரவல்குல் அம்மை என்று கண்டிருக்கிறது. மேலும் பல தானங்கள் பணமாகவும் நிலமாகவும் கோயிலுக்கு அளிக் கப்பட்டதாகக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

# மலேயாவில் சைவம்

ம. ரா.

மலேயா என்பது இந்து சீன தீபகற்பத்திற்குத் தெற்கே இந்தியச்சமுத்திரத்திற்குக் கிழக்கெல்லையாக நீண்டிருக்கும் ஒரு நீளமான தீபகற்பம். இதன் மேற்குக் கோடியில் பினங்கு என்ற தீவு நகரமும் தெற்குக் கோடியில் சிங்கப்பூர் என்ற தீவு நகரமும் இருக்கின்றன. தீபகற்பத்தின் பெரும் பரப்போ சிறுசிறு இராச்சியங்களாகப் பிரிந்து மலேயா சுல்தான்களின் ஆட்சிக்குட் பட்டிருக்கின்றன. அவைகள் ஆங்கிலர் மேற்பார்வையில் ஒரு கூட்டு அரசியல் நாடாக இப்போது ஆளப்படுகிறது. அக் கூட்டு அரசியலுக்கு குவாலாலம்பூர் என்ற நகரம் தலைநகராக இருக்கிறது.

மலேயா மிகவும் செழிப்பான நாடு. மிளகு முதலிய காட்டுத் திரவியங்கள் இயற்கையாக விளையும் மலைப்பிரதேசங்களைக் கொண்டுள்ளது. ஆங்கிலர் அதனைக் கைப்பற்றின பிறகு அங்கே ஈயச் சுரங்கங்களும் இரப்பர் தோட்டங்களும் நிரம்ப ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இத் தோட்டங்களினால் அரசியலுக்கு மிகுந்த வருமானம் உண்டு. அங்கே தோட்டங்களில் தொழில் செய்யக் கணக்கற்ற இந்தியர்களும் சீனர்களும் குடியேறி யிருக்கிறார்கள். இவர்களிலே தமிழ் மக்கள் மிகுதி. தோட்டப் பண்ணை, வட்டிக் கடை, கைத்தொழில், உத்தியோகம் இவைகளுக்காகவும் தமிழ் மக்கள் அந்நாட்டிற்குச் சென்றிருக்கிறார்கள். தென் இந்தியாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் கணக்கற்ற குடிகள் சென்று அந்நாட்டின் செல்வத்தைப் பெருக்கியுள்ளார்கள். இந்த வகையில் அந்நாட்டில் தமிழும் சைவமும் பரந்திருக்கிறது.

தமிழர்கள் தங்கள் மொழியையும் சமயத்தையும் மறக்கமாட்டார்கள். அவைகளில் ஈடுபட்டு மிகு தியாகப் போற்றுவார்கள். சமய நிலையங்களை அவர்கள் ஆதரித்துச் செழிப்பிப்பார்கள். இந்த வகையில் மலேயா சிறந்து இருக்கிறது.

மலேயாவில் இரண்டு சிறந்த சைவ நிலையங்கள் இருக்கின்றன. ஒன்று சங்கம், மற்றொன்று ஆலயம். சங்கம் சைவ சித்தாந்த சங்கம் ஆகும். இச்சங்கம் தொடங்கி 28 ஆண்டுகள் ஆகின்றன. இதனைத் தோற்றுவித்து மிகுந்த ஆர்வத்தோடு நடத்திய தலைவர் டாக்டர் ஆ. விசுவலிங்கம் அவர்கள். 26—12—48-ல்அவர்கள் இச்சங்கத்தின் வெள்ளி விழா நடத்தினார்கள். அவ்வெள்ளி விழாவில் தலைமை வகித்த பெரியார் நமது சமாஜத்தில் முன் செயலாளராக இருந்த திரு கா. இராமநாதன் ஆவார்கள். தற்போது டாக்டர் ஆ. விசுவலிங்கம் அவர்கள் ஓய்வு பெற்றுக் கொண்டு இலங்கை சென்று அங்கேயும் சைவத்திற்கு அரும்பாடு படுகிறார்கள். நமது சஞ்சிகையில் சில மாதங்களுக்கு முன் அவருடைய கட்டுரை ஒன்றும் வெளிவந்தது. அதனை வாசித்தவர்கள் அவர்களுக்கு உள்ள சைவ சித்தாந்த அறிவை அறிவார்கள். அவருக்குப் பிறகு மலேயாச் சங்கத்தைத் திரு. இராமநாதன் முதலியோர்கள் நடத்தி வருகிறார்கள். அச்சங்கத்தில் ஒழுங்காக சைவ சித்தாந்தச் சொற்பொழிவுகள் நடைபெறுகின்றன.

இச்சங்கத்தை ஒட்டி இராமநாத நூல் நிலையம் என்ற ஒரு நிலையம் தொடங்கப் பெற்று நடந்து வருகிறது. இராமநாதன் அவர்கள் இலங்கைச் சைவச்சீமான் என்று எல்லோரும் அறிவோம். அவர் பெயரால் இந்த நூல் நிலையம் நடைபெறுகிறது.

டாக்டர் விசுவலிங்கம் அவர்களின் மனைவியார் ஸ்ரீமதி உமாதேவி இரத்தினம்மாள் அவர்கள் சைவமங்கையர் சங்கம் ஒன்று நிறுவி அதனை நடத்தினார்கள். நால்வர் குருபூஜை சைவச் சொற்பொழிவுகள் முதலியவைகள் ஒழுங்காக நடைபெறுகின்றன.

இனி இரண்டாவது நிலையம் ஆதி ஈசுவரர் கோயில் ஆகும். இதனைத் தொடங்க 30—4—37-ல் ஒரு திருப்பணிச் சபை ஏற்பட்டு அதற்கு டாக்டர் ஆ. விசுவலிங்கம் அவர்களே தலைவர் ஆனார்கள். அவர்களுடைய விடா முயற்சியினால் ஆலயம் வெகு அழகாக அமைக்கப்பட்டது. அவர்களுக்கு உதவியாக பல பெரியார்கள் ஈடுபட்டார்கள். இக்கோயிலுக்கு இரண்டு பட்டயங்களும் நிறுவப்பட்டன. இக்கோயிலின் பரிபாலனத்திற்காக செலங்கோர் சட்டசபையில் ஒரு சட்டமும் பதிவு செய்யப்பட்டது. அதனை மலாய யூனியன் கவர்மெண்ட் கெஜட்டு 25—9—47-ல்

வெளியிட்டிருக்கிறார்கள். அதற்குரிய விதிகள் அந்தச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளன. அதிலே சங்கத்தின் நோக்கங்கள் அடியிற்கண்டபடி கூறப்பட்டுள்ளன.

"மலைய சைவ சித்தாந்த சங்கம் இந்தக் கோயிலைத் தாபித்த நோக்கத்தின் விசேட குறிப்புகள் :—

1. சிவன் என்ற சொல் தமிழ் மக்கள் பாரம்பரியமாக வழிபடும் முழுமுதற் கடவுளைக் குறிப்பதன்றி மும்மூர்த்திகளில் ஒருவரை அன்று.

2. என்றைக்கும் இக்கோயிலின் பரிபாலகரும் பூசகரும் தமிழ் மக்களாயும் மேலே விதிக்கப்பட்டுள்ள உண்மையினைக் கைக்கொண்டவராயும், சைவ ஆகம விதிகளைத் தழுவுவோராயுமிருத்தல் வேண்டும். பூசகர் வேளாண் மரபினராகும்; ஆதிசைவராயிருத்தல் உத்தமம்.

3. இக்கோயிலில் சிவனையே அன்றி இதர பரிவாரங்களை அமைத்தலாகாது.

4. இக்கோயிலில் வழிபடும் அடியார்கள் சைவசித்தாந்த வாய்மைகளை விளங்கிக்கொண்டு சிவனே எல்லாமாய் அல்லவுமாய், அப்பாலாய், தன்னைவழிபடும் அடியாரின் மனமணி லிங்கமாய் எங்கும் நிறைந்து நின்ற கடவுளாம் என்ற உண்மையை உணர்ந்து தமிழ் மக்களின் பழைய நூல்கள் அருளியவாறு கடவுள் ஒருவனே என்று தெளிதல் வேண்டும்."

இந்தச் சிறப்பில் மலேயாவில் சைவம் விளங்கிக் கொண்டிருக்கிறது.

---

5· கவிப்பகுதி

# இளங்கோவும் சமயங்களும்

(அ. நா. ப. திருஞானசம்பந்தம்)

தமிழ் மக்களிடையே தோன்றி, வளர்ந்து, அழிந்த இலக்கிய நூல்கள் எண்ணில. இன்று எஞ்சி நிற்பன சில சங்க இலக்கியங்களும், சங்க கால இலக்கியங்களும், பிற்கால இலக்கியங்களுமேயாம். சங்க கால இலக்கியங்களுள் சிறப்பித்து உச்சிமேல் வைத்து உயர்வுடையதென்று கூறத் தகுதிவாய்ந்த இலக்கியம் ஒன்றுண்டு. அஃது என்னை?



அதுதான் சிலப்பதிகாரம் என்னும் செஞ்சொற் பநுவலாகும். இந்நூலை எவ்வெவர் எவ்வெக்கண் கொண்டு நோக்குகிறார்களோ, அவ்வவர்க்கு அவ்வத் துறையில் உள்ள நுண்பொருள்களைத் தெள்ளிதின் விளக்கிக் காட்டும். இதனை அரசியல் வகைகளை வகுத்தளித்துக் காட்டும் அளவை நூல் எனலாம்; கற்பனையில் தோன்றுங் கருத்துக்கள் உயர்வுடையன; சிந்தனையைக் கிளறி அறிவிற்கு விருந்தளிப்பன என்பனவற்றை எடுத்துக் காட்டும் ஒரு நூல் எனலாம்; சமயவாதிகள் தத்தம் மதங்கள் உயர்வுடையன என்று நாத்திகரைக் காட்டிலும் நாசப்போர்களை நாளும் வளர்த்துக் காட்டுபவர்களுக்கு, அங்ஙனம் நிகழ்த்துதல் தகாது என்று அங்கையுற்ற நெல்லியென எடுத்து விளக்கும் ஒரு நூல் எனலாம்; சிந்தை செல்லாச் சேணெடுந் தூரத்து அந்தமில் இன்பம் துய்க்க எண்ணுவோர்க்குத் துணைசெய்யும் நூல் எனலாம். என்ன இக் காப்பியத்திற்கு இவ்வளவு பெருமை கூறப்படுகிறதே என சிலர் ஐயுறுதல் கூடும். மேற்கூறிய அனைத்தும் தன்னகமாகக் கொண்டு விளங்கும் நூல் சிலப்பதிகாரந்தான்.*

மெத்தப் பெருமையோடு, ஒரு நூல் விளங்குகின்றது என்றால், அப்பெருமை யாரைச் சார்ந்தது? அதனை இயற்றிய ஆசிரியனை அன்றோ? ஆம்! அவ்வாசிரியன் யார்? அவர்தான் நாடாளாக் காடாண்ட குரிசில் இளங்கோவடிகளாவர். இலக்கிய வரிசையில், இவர் இயற்றிய காப்பியம் தலையாய பீடத்தில் கொலுவீற்றிருக்கிறதெனின் அதற்குக் காரணம் இருக்கவேண்டு மல்லவா? ஆம்! இளங்கோ துறவு நிலை கொண்ட தூய்மை மனமுடையவர். அத்தகைய மனத்தினின்றும் தோன்றுங் கருத்துக்கள் யாங்ஙன மிருக்கும்? மாசற்றல்லவோ இருக்கும். இதைவிட அவரிடம் அனைவரும் கண்டு போற்றவேண்டிய மாட்சி யொன்றுண்டு. அது யாது? அதுதான் பிற சமயங்கள்பால் காழ்ப்புக் கொண்டு, அவற்றினைத் தூற்றுது விட்டு, பிறசமயங்களிலும் உள்ள நல்லனவற்றைப் போற்றுதல் என்பதேயாம். இஃது அமைவது, பொதுவாக அனைவர்க்கும் கடினமே.

*சிலப்பதிகாரம் சங்ககாலத்திற்குப் பிற்பட்டது என்பது தற்போதிய ஆராய்ச்சியாளர் கருத்து — ப-ர்.

சிலப்பதிகாரத்திற்குச் சமகால இலக்கியங்களான, மணிமேகலையும் சீவகசிந்தாமணியுங்கூட, சமய நிலையில் நின்று நோக்கும் பொழுது ஓரோவழித்தாய் நின்று, தாம் கொண்ட சமயங்களையே பேசிச் செல்கின்றன. சீத்தலைச் சாத்தனார் இயற்றிய மணிமேகலையை எடுத்துக் கண்டால், அஃது பௌத்த மதத்தின் உயர்வை உன்னதமாகக் கற்பிக்கும் ஓர் நூல் எனலாம். திருத்தக்க தேவரின் சீவகசிந்தாமணியை எடுத்துக் கொண்டால், அஃதோ சைனம் பற்றிய புகழை வரையறை செய்து பேசிச் செல்வதைக் காணலாம். ஆனால் இத்தகையதோர் நிலையை சிலப்பதிகரத்தில் காண இயலாது. இளங்கோவடிகள் சைவத்தையும் - அச்சமயக் கடவுளைப் பேச வரும்பொழுது, அவ்வவ் மத எல்லைக்கு உட்பட்டு அழகாகப் பேசுவதைக் காணலாம். இஃதேபோல் ஆருகதம், பௌத்தம், வைணவம் பற்றிப் பேசுகிறார்.

நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம், இன்று சமய மக்களாலும், மனவேற்றுமை இன்றித் தங்கள் சமயநோக்கைத் தாழ்த்திக் கொள்ளாது படிக்கத் தகுந்த இலக்கியமாக இருக்கிறது. இங்ஙனமிருப்பதால், இந்நூலை இயற்றிய ஆசிரியரை, அவ்வம் மதத்தைச் சார்ந்தவர்களும், தங்கள் சமயத்தைச் சார்ந்தவர்தான் இளங்கோவடிகள் என கூறத் தலைப்பட்டனர் ; தலைப்படுகின்றனர். நன்றாக ஆய்ந்து கண்டால் இளங்கோவடிகள் எந்தச் சமயத்திற்கு உரியவர் என்று நிலை நாட்ட இயலவில்லை. நிலை நாட்டத்தகுந்த காரணங்கள் இல்லாமல், அடிகள் காப்பியத்தில், காப்பியப் பாத்திரங்கள் வழிபட்ட சமயத்தைக் கூறுவதை அடிப்படையாகக் கொண்டு, அதுவே நூலாசிரியர் சமயம் என்று முடிவு கட்டுகின்றனர். அன்றியும் அதனை அமைத்தே கட்டுக்கடங்காத ஆராய்ச்சிக் கட்டுரைகள் என்ற தலைப்பில் பல வெளியாகியுள்ளன. இவ்விடத்தில் நாம் சற்று விவேகானந்த அடிகளாரின் கருத்தினை ஆய்வோம்.

ஒருவர் எந்த ஒரு சமயத்தில் தோன்றி வளர்ந்தாலும், அவர் அந்தச் சமயத்திற்கு உரியவர் ஆவரா? ஆகமாட்டார். ஏன் ? தோன்றிய அளவாலே, அவர் அச்சமயம் சார்ந்தவர் என்று கூறுவது பெரும் பேதமையே. ஒரு சமயத்தில் தோன்றி, அதற்குச் சார்பான நூல்களைப் பலகாலும் துருவித் துருவிக் கசடறக் கற்று, உண்மை ஆய்ந்து, மெய்ம்மை தெளிந்து, அறிவு விளக்கத்தில் மேம்பட்டு விளங்கும் பொழுதே, அத்தகைய நிலையை மற்றவர்கள் உணர்ந்து, அவர் ஒரு குறிப்பிட்ட சமயத்திற்கு உரியவர்தான் என்று போற்றல் வேண்டும். அப்பொழுதுதான் உண்மைச் சமயம் உணர்ந்தவரைக் காணுதல் சாலும். இவ்வுண்மையை விளக்குவது யார் ? அவர்தான் வீரகேசரி விவேகானந்த அடிகளாவர்.



விவேகானந்தரின் கருத்து ஏனைய மக்களிடத்தும் நிலவவேண்டிய ஒன்றேயாகும். ஒரு சமயத்தில் பிறந்து, வளர்ந்து, இறப்பதனால், ஒருவனுக்கு அதுதான் மேற்கொண்ட சமயம் என்று அறுதியிடல் தகாது. உண்பதையே, உடுப்பதையே, உறங்குவதையே கொள்ளும் ஒருவர்க்கு அவர் வழிபடும் சமயம், உண்ணல், உடுத்தல், உறங்கலேயாகும். அவர் எந்தச் சமய அறிவு பெற்றுத் தூய்மையுடன், வழிபாட்டு முறையில் விளங்குகிறாரோ, அந்தச் சமயத்திற்கே உரியவராவர். இந்நிலையில் இளங்கோவை அமைத்துப் பார்ப்போம். இளங்கோ, சைவ சமயம், வைணவ சமயம், ஆருகத சமயம், பௌத்த சமயம் இவைகளை முறையே கசடறக் கற்றிருக்க வேண்டும் என அவர் நூல் விளம்புகிறது. விவேகானந்தர் சமயம் பற்றிக் கூறும் குறிப்புரையைக் கொண்டு நோக்கும் பொழுது, இளங்கோவடிகள் எந்தச் சமயத்திற்கு உரியவர் என்று கூறலாம் ? எல்லா சமயங்களுக்கும் உரியவர் என்றன்றோ கூறுதல் வேண்டும் ! எல்லாச் சமயங்களையும் அணைத்து நிற்கிறார் எனின் அவர் சமயம் சமரச நிலையுடையது என்றல்லவா கூறவேண்டும் ?

இனி அடிகள் சொற்சுவை, பொருட்சுவை, அன்புச்சுவை ததும்பக் கூறும் சில இறை நிலையைக் கேட்டு இன்புறுவோமாக. தமிழ்நாட்டில் தோன்றிய தொன்மை வாய்ந்த சமயம் சைவமாகும் என்பதை நம் நாட்டு அறிஞர்களேயன்றி, பிறநாட்டு நல்லறிஞர்களும் நன்காய்ந்து ஒரு முடிவு கட்டியிருக்கிறார்கள். இத்தகையதொரு சமயம் தோன்றியதற்குப் பின் தோன்றிய சமயம் வைணவமும், ஏனைய சமயங்களும் என்பது எல்லோராலும் ஒப்ப முடிந்ததோர் கருத்தாகும்.

இளங்கோவடிகள் சைவ சமயக் கடவுளான பிறவா யாக்கைப் பெரியோனாகிய சிவபிரான் கோயிலை முதற்கண் அமைத்து இந்திர விழவூர் எடுத்த காதையில் சிறப்பிப்பது சிந்திக்கத் தகுந்ததாகும்.

பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீல மேனி நெடியோன் கோயிலும்
மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்

(காதை - 5. 169 - 173)

அடியார்க்கு நல்லார் பிறவா யாக்கைப் பெரியோன் கோயில் என்பதற்கு, பிறவா யாக்கை உடையவன் சிவபெருமான் என்றே பொருள் காண்கிறார். முதற்கண் சிவனெனும் செம்மேனி யம்மான் கோயிலைப் போற்றுவதைக் காணின், மிக உயர்விற்கும், தொன்மைக்கும் நிலைக்களனான ஒரு பரம்பொருளைப் போற்றுவதைக் காண்கின்றோ மல்லவா ?

கடலாடு காதையில் சிவபெருமான் ஆடிய ஆடலைப் பற்றி வெகுவாகச் சிறப்பித்துப் பேசுகிறார். தேவர் புரமெரிய வேண்டுதலால் வடவை எரியைத் தலையிலே யுடைய பெரிய அம்பு ஏவல் கேட்ட அளவில், அப்புரத்தில் அவுணர் விழுந்து வெண்பலிக் குவையாகி பாரதி அரங்கத்தில் உமையவள் ஒரு கூற்றினளாய் நின்று, பாணி, தூக்கு, சீரென்னும் தாளங்கள் செலுத்தத் தேவர் யாவரினும் உயர்ந்த சிவன் சயானந்தத்தாள் கைகொட்டி நின்று ஆடிய கொட்டி என்ற ஆடலைச் சிறப்பிக்கும் முகமாகச் சிவபெருமானுக்கு ஏற்றங் கற்பிக்கிறார்.

பாரதி பாடிய பாரதி யரங்கத்
திரிபுர மெரியத் தேவர் வேண்ட
எரிமுகப் பேரம் பேவல் கேட்ப
உமையவ ளொருதிற னாக வோங்கிய
இமையவ னாடிய கொடுகொட்டி யாடலும்

(காதை - 6. 39 - 44)

காடுகாண் காதையில் மாங்காட்டு மறையோன் வாயிலாகத் திருமாலைச் சிறப்புச்செய்து பேசுவது பெருமிதமுடையது. பொன்மலையின்மேல் நீலமேகம் ஓங்கி விரிந்தது



ஒப்பத் தனது படம் விரிந்தெழுந்த ஆயிரம் தலையுடைய பாம்பின்மேல் பள்ளிகொள்ளத் தேவர்கள் பலரும் தொழுதேத்த, திருமகள் பொருந்திய திருமார்பையும் உடையவனான திருமால் பள்ளி கொண்டிலங்கும் கிடந்த வண்ணமும் பெரிய மலை உச்சியின் மீதே ஞாயிறும், திங்களும் இருமருங்கு ஓங்கி விளங்கிய இடைப்பட்ட விடத்தே நல்ல நீலநிறத்தை உடைய மேகம் தன் மின்னாகிய புதுப்புடவையை யுடுத்துத் தன் வில்லாகிய பணியைப் பூண்டு நின்றாற் போல பகையை வருத்தும் ஆழியையும், சங்கையும், அழகிய தாமரைக் கையகத்தே வலனும், இடனும் ஏந்தி அழகுகிளரும் ஆரத்தைத் திருமார்பிற் பூண்டு பொற்பூவாடை யுடுத்து வெளிப்படச் சிவந்த திருக்கண் மலரை உடைய நெடியோன் நின்ற கோலத்தையும், காண்பதற்குச் செல்வதாக மறையோன், கோவலன் கேட்ட கேள்விக்குப் பதில் இருக்கும் தன்மையில், இளங்கோ அழகுபட உவமை நயம் ததும்பத் திருமாலைப் போற்றுவது இன்பத்தையே பயக்கிறது,

நீல மேனி நெடும்பொற் குன்றத்துப்
பால்விரிந் தகலாது படிந்தது போல
திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும்
மின்னுக் கொடியுடுத்து விளங்குவிற் பூண்டு
நன்னிற மேக நின்றது போலப்
பகையணங் காழியும் பால்வெண் சங்கமும்
தகைபெறு தாமரைக் கையி னேந்தி
நலங்கிள ரார மார்பிற் பூண்டு
பொலம்பூ வாடையிற் பொலிந்த தோன்றிய
செங்க ணெடியோன் நின்ற வண்ணமும்

(காடுகாண்காதை 11-35-51)

நாடு காண்காதையில் அருகதேவன் சிறப்பைப் பேசுவது பெருமைக்குகந்த துறையில் அமைகிறது. எல்லாப் பொருளையும் அறியும் அறிவை உடையோன் : அறஞ் செய்தலையே தொழிலாக உடையான், எல்லா உயிர்கட்கும் இதனையுள்ளவன் ; வீட்டுப் பேற்றுக்கு நாயகன்; ஒடுங்கினவன், ஆகாசவாசி, எப்பொருளிலும் தங்குகிறவன், சுகத்தைப் பண்ணுகிறவன், எண்குணங்களை உடையவன், ஆகமம் மூன்றிற்கும் முதலாய் உள்ளவன் எனச் சிறப்பிக்கிறார்.

சினவரன் குறவன் சிவகதி நாயகன்
பரமன் குணவதன் பரத்தி லொளியோன்
ஆதிய வேதத் தொளியுறி னல்லது
போதார் பிறவிப் பொதியறை யோரென
(நாடுகாண்காதை-10)

இதுவரை இளங்கோ சில சமயக் கடவுளர்களின் ஏற்றம் கூறுவதைக் கண்டோம். இதுபோல காப்பியத்தில் ஊடுருவிச் சென்றால், பற்பல விடங்கள் கிடைக்கும். உதாரணத்திற்கு மேற் காட்டியவைகளே சாலும். முடிந்த முடிபாகக் கண்டால் துறந்த ஞானிக்குக் கடந்த எல்லையில் உள்ளவர்க்கு—எல்லாச் சமயமும் ஒன்றே என்பதைத்தான் இளங்கோ காட்டுகிறார். எந்தச் சமயத்தை ஒருவர் சார்ந்திருப்பினும் இளங்கோவைப்போலப் பொது நோக்குக் கொண்டு விளங்கவேண்டும். ஒவ்வொருவர்க்கும், தாங்கள் வழிபடு சமயத்தையும், அக்கடவுளையும் சிறப்புச் செய்து வந்தனை வழிபாடுகள் இயற்ற வேண்டியதுதான் கடமை. அதில் ஒன்றுந்தவறு இல்லை. ஆனால் அதே சமயத்தில் வேற்று மதங்களையும், கடவுளர்களையும் தூற்றிப் பேசும் துச்சநிலை அமைதல் கூடாது. மக்களில் பலர் இன்றுவரை பிறசமய தூடணை செய்பவர்களை நாம் கண்கூடாகக் காண்கிறோம். உடலில் ஊறு நேர்ந்தால், அதனைச் சிகிச்சை செய்ய உடனடியாக மருத்துவரை நாடவேண்டும். அதுவன்றி ஊறு நேர்ந்ததோடு, புரையோடவும் விட்டு, அதற்குமேல் புனுகு தடவினாலும் பயனில்லாதொழியும். அதுபோல மாற்று மதங்களை உடலில் ஊறு நேர்ந்த பாகங்களாகக் கொண்டாலும், அதனை நாம் சிகிச்சை செய்ய முற்படுவதுபோல, காழ்ப்புக் குணங்களை அகற்றுவதோடன்றி, தூற்றிப் பேசும் துச்ச வழக்கமும் நம்மைவிட்டு நீங்கவே வேண்டும். இன்றேல் சமயத் துறையில் குழப்பங்கள் விளையும் என்பதை விளக்கவும் வேண்டுமோ? நம் சமயமோ விரிந்த நோக்கங்களைப் பரந்த கொள்கைகளைத் தன்னகமாகக் கொண்டிலங்குகிறது. அங்ஙனமெனில் அதனை வழிபடும் மக்கள் அத்தன்மை யோடல்லவோ விளங்க வேண்டும். நீங்குக காழ்ப்பு மனப்பான்மை! வளர்க பொதுமை நோக்கு! ஓங்குக சமய வாழ்வு!

---

6. கலைப்பகுதி

# சென்னைக் கண்காட்சிச்சாலையில் திருவுருவங்கள்

அழகுமதியன்

சென்னைக் கண்காட்சிச்சாலையின் 1949—50 ஆண்டின் அறிக்கையை அரசியலார் வெளியிட்டிருக்கின்றனர். அதில் சில சிறந்த குறிப்புகள் இருக்கின்றன. அவற்றைச் சைவ மக்கள் அறிந்துகொள்வதற்காக இங்கே கூறுகின்றோம்.

1. தென் ஆர்க்காடு வட்டத்தில் விழுப்புரத்திற்கு அருகில் இருக்கும் பனமலை என்ற ஊரில் உள்ள சிவாலயத்தில் பல்லவர் காலத்திய ஓவியம் ஒன்று இருக்கக் கண்டுபிடித்து அதனைப் போல ஒரு பிரதி எழுதி அதனைக் காட்சிச்சாலையில் வைத்திருக்கிறார்கள். இந்த ஓவியம் பார்வதி தேவியினுடையது. அதனுடைய அளவு $4\frac{1}{4} \times 2\frac{1}{2}$ அடி. இந்த ஓவியம் இராஜசிங்கப் பல்லவன் (7 நூ.) காலத்தது என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். இதுதான் தமிழ்நாட்டுப் பண்பாட்டின் ஓவியக்கலையைச் சிறப்பிக்கும் முதல் முதல் காட்சிப் பொருளாம். ஆகையால் இதனை சைவ அன்பர்கள் கண்டு மகிழவேண்டியது அவசியம். கூடுமானால் பனமலைக்குச் சென்றாலும் அதனைக் கண்டு இன்புற வேண்டும்.

பனமலையிலுள்ள குடைக்கோயிலை இராச சிம்மன் என்ற பல்லவன் கட்டினான் என்பதற்கு அதிலுள்ள வடமொழிக் கல்வெட்டே சான்று. அதில்,

" ராஜஸிம்ஹோ ரணஜய :
ஸ்ரீபாஸ்சித்ர கார்முக :
கவீரஸ் சிரம்பாது
சிவ சூடாமணிர் மஹீம்."

என்று இருக்கிறது. (S. I. I. 1. 31.) இந்த ராஜ சிம்மனே காஞ்சி கயிலாயநாதர் கோயிலைக் கட்டினவன். அதில் வெட்டிய மெய்க்கீர்த்தியில் மேலே கண்ட சுலோகம் இறுதியில் உள்ளது. இந்தச் சைவ அன்பு மிகுந்த பல்லவ மன்னன் கட்டிய கோயிலைப் பார்க்க வேண்டாமா?

இங்கே அதே காலத்திலே அருமையான ஓவியம் ஒன்று தீட்டப்பெற்றது. அது இதுகாறும் நிலைத்துள்ளது. அக்காலத்தில் அம்மையார் உருவம் எவ்வாறு கருதப்பட்டது என்பதற்கு இதுவே அத்தாட்சி என்க. பண்டைய ஓவியம் அழியத் தொடங்கியுள்ளது. அதனை அதிகமாகப் பிரதி எடுத்தே போற்றத்தக்கது. மூல ஓவியத்தையும் கெடாமல் பாதுகாப்பது அவர்கள் கடமையாகும்.

2. இராமநாதபுரம் மன்னருக்குச் சேர்ந்த கோயில்களின் இரண்டு தேர்களை அவ்வரசர் காட்சிச் சாலைக்குத் தந்திருக்கின்றார். அவைகளை முழுதும் கொண்டு வர முடியவில்லை. உட்பகுதிகள் பழுதுபட்டிருந்த படியால் மேல் பகுதியிலிருந்த மரவேலைகளை மட்டும் பிரித்துக் கொண்டு வரப்பட்டன. அவைகளில் 400 உருவங்கள் இருக்கின்றன. மரவேலைத் திறம் நன்றாக இருக்கின்றது. திருமலை நாய்க்கன் காலத்துச் சிற்பவேலை என்று கருதப்படுகிறது. இவ்வித மரவேலைப்பாடு நமது நாட்டில் குறைந்துகொண்டு வருகிறது. ஆதரவாளர்கள் இல்லாத குறைவினால் இந்த நற்கலை மறையத் தொடங்கிற்று. ஆனால் ஒன்றை அறிந்து மகிழவேண்டும். சில ஆண்டுகளுக்குமுன் பணத்திற்கு ஆசைப்பட்டு மதுரை முதலிய இடங்களில் இருந்த சிற்பக் கலைப் பொருள்களை வெளிநாடுகளுக்கு விற்றுவிட்டார்கள். அவ்வாறு செய்யாமல் நமது நாட்டுக் காட்சிச் சாலைக்குக் கொடுத்தது போற்றத் தக்கது. பேரூர் போன்ற சில ஊர்களில் அருமையான தேர்ச் சிற்பங்களைப் பத்திரப் படுத்தாமல் மழைக்கும் வெய்யிலுக்கும் பாழடையவிட்டு விடுகிறார்கள். அவ்வாறு செய்யாமல் இராமநாதபுர மன்னர் காட்சிச்சாலைக்குக் கொடுத்தது போற்றத்தக்கது அல்லவா? ஒவ்வொரு ஆலயத்திலும் பயனற்றுப்போன திரவியப் பொருள்களை ஒரு கண்காட்சியாகச் சேமித்து வைப்பதே ஒரு சிறப்பு ஆகும். இவ்வாறு சீரங்கம், அழகர் கோயில் முதலிய கோயில்களில் நடைபெறுகின்றது. அதனைப்போல மற்ற ஆலயக்கர்த்தர்களும் போற்றுவார்களா?

3. சிவகங்கையில் ஒரு தீர்த்தங்கரரின் வெண்கலத் திருவுருவம் கிடைத்தது. அது 12 - நூ -க்கு. முந்தியதென ஆராய்ந்து கூறுகிறார்கள். திருவுருவம் வெகு அழகாக இருக்கிறது. ஒரு பீடத்தில் உட்கார்ந்த நிலையில் பத்மாசனத்தில் கால்கள் மடக்கிக்கொண்டு இருகைகளும் ஒன்று சேர்த்திப் பாதங்களின்மீது அமர்த்தித் தியானத்தில் இருக்கும் முறையில் அவ்வுரு இருக்கிறது. இருபுறமும் இரண்டு சாமரேந்திரர்கள் சாமரங்களை வீசியபடி நிற்கிறார்கள். அவர்கள் நிற்கும் தோரணை மிக அழகாக இருக்கிறது.



வெண்கலச் சிற்பக் கலைக்கு இவ்வுருவம் மிக அழகிய எடுத்துக்காட்டு ஆகும். இந்தக் கலையும் இப்போது நசுங்கிப் போயிற்று அல்லவா? நசுக்காமல் பாதுகாப்பது செல்வமுடையார் பொறுப்பு அல்லவா?

---

## 7. ஆராய்ச்சிப் பகுதி

# சங்கரப்பாடியார்

கே. எஸ். வைத்தியநாதன், பி.ஏ.

‘சங்கரப்பாடி’, ‘சங்கரப்பாடியார்’ என்ற சொற்கள் மிகப் பண்டைக் காலந்தொட்டே பயின்று வந்துண்டு என்று பல்லவர் காலமுதல் கிடைத்துள்ள பல்வேறு காலத்துக் கல்வெட்டுக்களால் நன்கு போதரும். இச்சொற்களின் பொருள்களையும் இவை பற்றிய ஏனைய விஷயங்களையும் இங்குத் தொகுத்து வரைவாம். ‘சங்கரப்பாடியர்’ என்பவர் எண்ணெய் உற்பத்தி செய்து வந்த செட்டிகளும் வியாபாரிகளும் ஆவர் என்றும், இவர்கள் கோயில்களில் எரித்துவந்த நந்தா விளக்குகளுக்கும், மாதேவர்க்குத் திருஎண்ணெய் காப்புச் சாற்றி யருளவும் வேண்டும் நிபந்தங்களுக்காகவும் விடப்பட்ட பசு, நிலம், பொன் முதலியவைகளைக் கோயில் சபைகளினின்றும், கிராம நிர்வாக சபைகளினின்றும், தர்மம் செய்யவந்தோர் பக்கலும் பெற்று அவர்கள் குறித்த காலங்களில் கோயில் நிர்வாக அதிகாரிகளிடம் எண்ணெயைக் கொடுவந்து அளந்து போவாரென்றும், தாங்களே நந்தாவிளக்குகளை எரிப்பித்தும் வந்தனர் என்றும், இதுபோன்ற மற்ற வேலைகளையும் செவ்வனே செய்துவந்தனர் என்றும் கல்வெட்டுகள் கூறுகின்றன. இச்சங்கரப்பாடியார் தனிப்பெரும் வீதிகளிலும் தனிச் சேரிகளிலும் வதிந்தனர் என்றும் அறியலாம். அச்சேரிகளுக்குச்

'சங்கரப்பாடி' என்றும் பெயரெனத் தெரிகிறது. சில சமயங்களில் இச்சங்கரபாடிக்கே 'பெருந்தெருவு' எனவும் பெயருண்டென்று 'சங்கரப்பாடியான இராஜராஜப் பெருந்தெருவு' என்று கூறும் திருவொற்றியூர்க் கல்வெட்டினால் வலியுறும். சங்கரப் பாடியார் நகரத்தார் என்றும், இவர்கள் திருப்பரம்பியத்தில் விரயாக்கலிப்பெருந் தெருவில் வதிந்தனர் என்றும் மற்றொரு சாசனம் கூறும். இவை போலவே ராஜாஸ்ரயபுரத்தில் அருள்மொழி தேவப்பெருந் தெருவும், திருநெல்வேலியில் சுத்தவல்லிப் பெருந்தெருவும் சங்கரப் பாடியார் இருந்த இடங்களென அறிகிறோம். பின்னர், கச்சிப்பேட்டில் பல சேரிகளிலுமிருந்தனரென்று "இவ்வூர் இரணஜயப்பாடி, ஏகவீரப்பாடி, வாமன சங்கரப்பாடி" என்ற "மூன்று சேரி சங்கரப் பாடியாரும்" என்று கல்வெட்டுகள் வந்துள்ளதால் விளங்கும். மாமல்லபுரத்தில் கரும்பிடுகுசேரியில் சங்கரப்பாடியார் இருந்தனர். என்று ஒரு சிலாசாஸனம் கூறுகிறது. உத்தரமேரூர் சதுர்வேதி மங்கலத்தில் வடக்கிலங்காடி என்ற பகுதியில் சங்கரப்பாடியார் இருந்தனர் என்று மற்றொரு கல்வெட்டுப் பகருகிறது.

இச்சங்கரப்பாடியார் இருதிறப்பட்டார் எனவும், அவர்களில் ஒருவர் வியாபாரம் செய்து வந்தவர் என்றும், மற்றவர் கூலிக்குத்தொழில் செய்வார் என்றும் கல்வெட்டுக்களினின்றும் புலப்படுகின்றது. முக்கியமாக எண்ணெய் உற்பத்தி செய்தும், அதனைப் பலவிதத்தில் வியாபாரம் செய்வதிலும் முனைந்திருந்தனர். கிராமத்திற்குப் பலவித நித்திய தேவைகளுக்கும், பெருங்கோயில்களில் ஏராளமாக அமைந்த நந்தாவிளக்குகளின் தேவைகளுக்கும், பல்வேறு மூர்த்தங்களின் எண்ணெய்க் காப்புகளுக்கும், அத்தியாவசியமாக வேண்டி வந்த எண்ணெயை இவர்களே உற்பத்தி செய்து உதவி வந்தனர்.

இச்சங்கரப்பாடியாரைப்பற்றி மற்றும் தெரியவருவது யாதெனில் இவர்கள் தனியே வதிந்து வந்த சேரிகளுக்கும் பாடிகளுக்கும், ஊராட்சிக்கு அவசியமான குழுவினராய் இருந்தனர் என்றும், அந்தச் சபைகளையும் "சங்கரப்பாடியார்" என்ற பெயராலேயே அழைத்து வந்தனர் என்றும் 'சங்கரப்பாடியோம்', 'எம்மூர் சங்கரப்பாடி கொண்டு அட்டுவோமானோம்', 'நகரம் திருக்கோவலூர் சங்கரப்பாடியோம்', 'பிறம்பில் விரயாக்கலிப் பெருந்தெருவிற் சங்கரப்பாடியோம்', 'மூன்று சேரி சங்கரப்பாடியார் கொண்ட பொன்...எரிப்போமானோம்', 'எம்மூர் சங்கரப்பாடி கொண்டு பொலிப்புடைத்தாகச் சேவிப்போமானோம்'— என்ற இவைபோன்ற சொற்களாலும், சொற்றொடர்களாலும் விளங்குகின்றது.



இச்சபையார் பொன், பசு, நிலம் முதலியவைகளைப் பிறரிடம் பெற்றுத் தர்மம் செய்த நிபந்தங்களுக்கும், நந்தா விளக்குகளுக்கும், வேண்டும் எண்ணெயைக் குறித்த காலங்களில் தர்மம் முட்டுப்படாமல் சேகரித்துக் கொடுத்து வந்தனர் என்றும், தாங்களே விளக்குகளை எரித்து வந்தனரென்றும், நில விலை ப்ரமாணங்கள் செய்தும், தேவதான நிலங்களைக்கொண்டு நிவந்தங்களைச் செய்து முடிக்க ஒப்புக்கொண்டனரென்றும், இச்சபையார் பிற சபைகளுடனும் சேர்ந்து சில பொதுக்காரியங்களில் ஈடுபட்டு வந்தனரென்றும் பல கல்வெட்டுகளால் அறிகிறோம்.

இச்சங்கரப் பாடியர், சேரியில் வாழ்ந்த குடும்பங்களால் நன்கு முறையே தேர்ந்தெடுக்கப்பட்ட சபையினர் என்றும், ஏதோ முறையில் சமயத்திற்கு வேண்டுமாறு ஒருங்குசேர்ந்த குழுவினர் அல்லர் என்று அறிகிறோம்.

இனி, இவர்கள் பெயர்கள் பலவிதமாகக் காணப்படுகின்றது. உதாரணமாக, மாயிலட்டி, கண்டன் மறவன், எட்டி மாதவன், சங்கரப்பாடியான் அங்காடி எடுத்த பாதம், சங்கரப்பாடியான் திருபூதணியக்கன், சங்கரப்பாடியான் தென்னவனடி, சங்கரப்பாடியான் எடுத்தபாதம் வடவாயிலான எங்குமுளான் என்பன. இவைபோலவே அமைந்துளது பிற்கூறப்படும் கலியனார் என்ற நாயனார் பெயரும்.

ஒரு சில கல்வெட்டுகளிலிருந்து சங்கரப்பாடி என்னும் சேரி நகரங்களிலும், சதுர்வேதிமங்கலங்களிலும், அடங்கியிருந்த ஓர் இன்றியமையாத சேரி அல்லது பாடி என்றும், இவைகளுக்குத் தனியே கோயில்களும் இருந்ததுண்டென்றும் தெரிய வருகிறது. இச்சங்கரப்பாடியின் சபை நாடு நகரத்தார் போன்ற சில சபைகளுடன் கலந்து நிலவிலைப்ரமாணம் போன்ற காரியங்களை செய்ததுண்டென்றும் தெரியவருகிறது. இச்சங்கரப்பாடிச் சபைகளின் ஆதுங்

கணத்தாருள் இரண்டொருவரை தேர்ந்தெடுத்துப் பிறசபைகளின் பிரதிநிதிகளுடன் சேர்ந்து நாட்டில் வழங்கிவரும் பொன் முதலியவற்றின் தூய்மையைப் பரிசோதனை செய்து வந்தனர் என்றும் முதலாம் பராந்தகன் காலத்துக் கல்வெட்டொன்றால் அறிகிறோம். பிற சபைகளிலிருந்ததுபோல் சங்கரப்பாடியை நிர்வகிக்கும் தலைவருக்குச் 'சங்கரப்பாடிக் கிழான்' என்று பெயர் வழங்கிற்று. திருக்கச்சூர் கல்வெட்டினால்,காஞ்சியிலும் அதனைச் சார்ந்த சேரி, கிராமங்களிலும் மற்றுமுள்ள 24 நகரங்களிலுமுள்ள எண்ணெய்ச் செட்டிகளின் சங்கரப்பாடி சபை அங்கத்தினர்கள் ஒன்று சேர்ந்து காஞ்சிமா நகரத்து திருக்காட்டுப்பள்ளி நாச்சியார் கோயிலில் கூடினர் என்றும் தெரிகிறது. அவர்கள் நிச்சயித்தபடி திருக்கச்சூரிலுள்ள திருவாலக்கோயிலுடையார்க்கு விளக்குக்கும், நைவேத்தியத்திற்கும் வேண்டுவனவற்றை திருக்கச்சூர் எண்ணெய்ச்செட்டிகள் கொடுக்க வேண்டும் என்றும், திருக்கச்சூர் கோயிலுக்குட் பட்ட இடங்களிலுள்ள செக்குகள்மேல் உள்ள வரிகள் கச்சூர் கோவிலுக்கு உரித்து என்றும், அத்துடன் நிர்ணயித்த அளவு எண்ணெயும், செக்கொன்றுக்கு காசு ஒன்றாகத் தாங்களே தங்கள் கட்டுப்பாட்டிற்கிணங்கி, ஜாதி தர்மமாகக் கொடுத்துக் கோயிலுக்கே சேர்க்கவேண்டும் என்றும் கூட்டத்தில் நிச்சயிக்கப்பட்டது.

ஒரு கல்வெட்டினால் 25 சங்கரப்பாடிக்குடும்பங்களைப், பழையனூர் திருவாலங்காட்டில் குடியேற்றி, அவர்களைக் குடியேற்றின சேரிக்கு 'இராஜேந்திர சோழப்பாடி' என்று பெயரிடப்பட்டதென்றும், அவர்கள் கோயிலில் பதினைந்து நந்தாவிளக்குகளை எரிப்பிக்க வேண்டியவர்களென்றும், அரசர் ஆணையால் நியமிக்கப் பட்டதென்றும் தெரியவருகிறது.

## பெயர் ஆராய்ச்சி

'சங்கரப்பாடியார்' என்ற பெயர் பல்லவர்காலம் தொட்டு பயின்று வந்ததெனினும், 'சங்கரன்பாடியார்' என உத்தம சோழனின் கல்வெட்டொன்றில் வந்துளது நோக்கற்பாலது. இதனின்று, இவர் சிவபக்தர்களாக இம் மன்னர் காலத்துத் திகழ்ந்தனர் எனக் கூறவும் அமையும் இதற்குப் போதிய ஆதாரமும் உள்ளது. சங்கரப்பாடி



என்ற பெயரின் ஆராய்ச்சியில் புகுங்கால், பொய்யடிமையில்லாத சேக்கிழாரது 'பெரியபுராணம்' ஓர் உதவியாக விளங்குகின்றது.

தொண்டைநாட்டில் திருஒற்றியூரில் உள்ள பெருங் கோயிலைச் சுற்றி, அணி நிறைந்த மைதவழ் வளநெடு மனைகளையுடைய பெருந்தெருவுகள் இருந்தன. குளிர்ந்த தோப்புகளையுமுடைய அப்பெருந்தெருக்களில் மண்டபங்களும், இசையரங்கங்களும், நாடக மேடைகளும், திருமடங்களும் நிரம்பியிருந்தன. அந்தணர் வேதங்கள் ஓதும் ஓசை நிரம்பிய தெருக்களும், நல்லுணவுகளை அளித்து வந்த மடங்களும் நிரம்பியிருந்தன. எங்கும் நன்மணம் கமழ்ந்திருந்தது. செழுநிலவின் துகளனைய மணற்பரப்பும், திருப் பரப்பும் அவ்வூரில் அமைந்திருந்தது. 'வெயிலணி பன் மணிமுதலாம் விழுப்பொருளாவன விளங்கும், தயில வினைத்தொழில் மரபில் சக்கரப்பாடித்தெருவு'ம் இருந்தது. எள்ளினின்று எண்ணெய் எடுக்கும் தொழிலில் ஈடுபட்டு வந்த குலத்தினர் இத்தெருவில் வதிந்தனர். ஈங்கு செல்வம் நிறைந்து திகழ்ந்த பெருங்குடி யொன்றில் கலியனார் பிறந்தார். அவர் முக்கட்தேவர்க்கு 'திருஒற்றியூரமர்ந்த கொல்லை மழவிடையார் தங்கோயிலின் உள்ளும் புறமும், அல்லும் நெடும் பகலும் இடும் திருவிளக்கின்' எண்ணெய் தவறாது அட்டுவதே மிகச்சிறந்த தொண்டாக எண்ணி, எண்ணிலா திருவிளக்கு நெடுநாளெல்லாம் நந்தாமல் எண்ணெய்விட்டு ஏரித்து வந்தார். இப்படி ஆண்டுகள் பல செல்ல, தம்பெருஞ்செல்வம் குறைபட்டுப் பிறகு தரித்திரம் தன்னை அடைந்தது. 'திருமலி செல்வத்துழனி தேய்ந் தமிழ்ந்தபின்னையுங்' கூலியினால் தமது திருப்பணி செய்வார். 'சக்கர எந்திரம் புரியும் களனில் வரும்பணிசெய்து பெருங்கூலி காதலித்தார்'; 'செக்கு நிறை எள்ளாட்டிப் பதமறிந்து திலதயிலம், பக்கமெழ மிகவுழந்தும் பாண்டில் வரும் எருதுய்த்தும்'; கூலி பெற்றுத் தன் தொண்டை எவ்வாற்றாலும் ஆற்றிவந்தார். எண்ணெய் உற்பத்தி செய்பவரிடம் கூலி பெற்று, கூலியை எண்ணெய்க்காக மாற்றி விளக்கெரித்தார். தொழிலாளர் அதிகரிக்க இவருக்கு வேலை கிட்டாமல், தன் தருமபத்தினியையுங்கூடத் தான் மேற்கொனட இறைவனுக்கு ஆற்றும் தொண்டை நிறை

வேற்ற, பொன்னிற்கு விற்கத் துணிவுகொண்டு, நிதி நிறைந்த செல்வர்கள் மிகுந்த அந்நகரைச் சுற்றி வந்தார். தன் மனைவியைப்பெற்றுப் பொன் கொடுக்க யாரும் கிடைத்திலர். துன்பநிலைமையில் தன் தொண்டு முட்டுப்படுவதைச் சிந்தித்துத் தவிக்கலாயினார். கனவிலும், செல்வக் குடியிற் பிறந்த தனக்கு, அத்தகைய நிலைமை ஏற்படும் என்று எண்ணினாரிலர். இறைவனுக்கு விளக்கேற்றும் நேரம் கிட்டவே விளக்குகள் அணைந்தால் தன் உயிரையே நீப்பதாக சபதங்கொண்டு, எண்ணெயுமில்லாமல் விளக்குகளில் திரிகளையிட்டார். எண்ணெய்க்குப் பதிலாகத் தன் உடம்பில் ஊறும் இரத்தத்தையே இவ்விளக்குகளில் நிரப்பவும் உறுதி கொண்டார். கையில் கத்தி ஏந்தி உடலினின்றும் குருதியெடுக்க முற்பட்டார். தோன்றாத்துணைவனான முக்கட்செல்வன் நாயனாரின் பக்தியை மெச்சிச் சட்டென வந்து தடுத்தாட் கொண்டார். இதுவே சேக்கிழார் வரைந்த கலியனார் புராணம்.

கலியநாயனார் வாழ்ந்தது ‘ சக்கரப்பாடி ’ என்றும், அது ஒரு பெருந்தெருவு என்றும், சக்கரப்பாடியார் எண்ணெய் உற்பத்தி செய்யும் வணிகரென்றும், அவருள்பலர் பெருஞ் செல்வந்தர்களாக வாழ்ந்தனர் என்றும் தெற்றென விளங்கும். கல்வெட்டுகளுக்கு இயையவே கோயிலின் நந்தாவிளக்கெரிப்பதே பெருந் தொண்டென்று கருதினார் பலர். ஊதியங்கிடைத்து வாழ்ந்தார் பலர். அப்பெருஞ் செல்வர்களிடையே பிறந்து, சிவமகிமையை வெளிப்படுத்தினார் கலியநாயனார்.

கலியனார் திகழ்ந்த திருஒற்றியூர் சக்கரப்பாடிக்கு ‘ இராஜராஜப் பெருந்தெருவு ’ என்று பிற்காலத்தில் பெயரிடப்பட்டது.

இங்கு நாம் நோக்கற்பாலது ஒரே ஒரு வித்தியாசம். சேக்கிழார் இந்தச் சேரியை ‘ சக்கரப்பாடி ’ என்றார். கல்வெட்டுகள் பெரும்பாலும் ‘ சங்கரப்பாடி’ யென்றே குறிக்கின்றன. இச்சேரியினர் செக்கு என்னும் சக்கர எந்திரத்தை உதவியாகக் கொண்டு எள்ளினின்றும் எண்ணெய் எடுத்து வந்த காரணத்தால் ‘ சக்கரப்பாடி ’ என்று பெயர் பெற்றது. ‘ சங்கரப்பாடி ’ என்று கலியநாயனாருக்குப் பின்னரே மாறியிருத்தல் வேண்டும். அவர் தன் குலத் 



தொழிலின் வழியே சங்கரனின் தொண்டாற்றி வந்து முக்தி பெற்ற பெருமையால் ‘ சக்கரப்பாடி ’ என்பது ‘ சங்கரப்பாடி ’ எனவும் திரிந்தது என்று கூறினும் இழுக்காகாது. இதற்கியையவே உத்தமசோழன் காலத்துக் கல்வெட்டொன்று ‘ சங்கரன் பாடியார் ’ என்று குறித்துள்ளதும் எண்ணற்பாலது. சங்கரப்பாடியார் ‘கச்சிப்பேட்டில் இருந்தது முன்னமேயே கூறினோம். கச்சிப்பேட்டு ஊரகத்தில் சக்கரச்சேரி ’ இருந்தது என மற்றொரு கல்வெட்டால் அறிகிறோம். இதுவும் ‘ சக்கரப்பாடி ’ என்பதற்கும் இயையும்.

---

## 8. விரிவுரைப் பகுதி

அகில இலங்கைச் சைவ இளைஞர் மத்திய மகாசபை

1951-ம் ஆண்டின் மகாநாட்டில்

20-5-51 சிவக்கவிமணி அவர்கள் நிகழ்த்திய

# தலைவர் உரை

அன்பர்களே ! தாய்மார்களே ! பெரியோர்களே !

உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த வணக்கம். என்னை இம்மாநாட்டுக்குத் தலைமைதாங்கும்படி ஆணை தந்து வரவழைத்த உங்கள் அன்புக்கு நன்றிசெலுத்துகின்றேன். உங்கள் அன்புகாரணமாக இதற்கு முன் பல ஆண்டுகளில் இங்கு வந்து இயன்ற பணிசெய்துள்ளேன். அப்படியிருக்க, மீளவும் இவ்வாண்டு அடியேனை விரும்பி அழைத்தது என்ன காரணமோ ? விளங்கவில்லை. உங்கள் சபை இளைஞர்களது கூட்டம். அடியேனோ மிகவும் கிழவன். நரை திரை முதலியனவாய் மனிதர்க்கு வரும் கேடுகள் ஐந்தனுள் பெரும்பாலனவாகிய நான்கும் வரப்பெற்றவன். உங்களுடைய இளமையுள்ளத்தினுள்ளே புகுந்து அவற்றிற் குறிக்கொண்டு எழும்ஆர்வங்களை அறியவும்,அவை செலுத்தப்படுதற்கு வழிகளை ஓரளவிலேனும் வகுத்து நெறிகாட்டவும் வல்லேனல்லேன். ஆயின், அதுபற்றி மறுக்காது இசைந்துவந்ததென்னை? எனின், எங்கள்நாவலர்பெருமான் முதலிய பெரியோர்களது நன்னாட்டினையும், நல்லூர்களை

யும், அந்நாட்டு நன்மக்களையும் பின்னுமொருமுறை கண்டு களித்துப் பயன்பெற எண்ணியேயாம். இங்கு இப்போது எதிர்மறைமுகத்தால் எனக்குச் சில கருத்துக்கள் நினைவுக்கு வருகின்றன. ஒருகாலத்தில் ஓரிடத்தில் நான்கு பெரியவர்கள்-ஆராய்ச்சி வல்ல அறிவாளிகளான பெருமுதியோர்கள் கூடினர். அவர்களுக்குப் பல ஐயப்பாடுகள் இருந்து அவர்களின் மனங்களை ஒருவழி நிறுத்த முடியாமல் குழப்பிக்கொண்டிருந்தன. அவர்கள் ஒரு தலைவரை நாடிச் சென்று கண்டனர். அவர் ஓர் ஆலமரத்தினடியில் அமர்ந்திருந்தனர். அந்நாள்களில் பெருமரங்களின் அடியேதான் கல்விக்கூடங்கள், அறிவுக்கூடங்கள், ஞானக்கூடங்களாக விளங்கின. புத்தர் போதிமரத்தி னடியில்தான் அறிவு விளங்கப் பெற்றதாக வரலாறு கூறுகின்றது. விலை பெற்ற பெரிய கட்டிடங்களிலேதான் அறிவு விளங்கும் என்ற கொள்கை பிற்காலத்தது. அவ்வாறு வந்த நான்கு முதியோர்களையும் அமரும்படி அத்தலைவர் கைகாட்டினர்; அவர்களும் அமர்ந்தனர். தலைவரும் அமர்ந்தவாறே கைகாட்டினதன்றி வாயினால் ஒன்றும் சொல்லவில்லை; வந்த முதியோர்கள் கேட்கவுமில்லை. ஆனால் ஒரு கணத்தில் அவர்களது ஐயப்பாடுகள் எல்லாம் நீங்கிவிட்டன. பெரிய அதிசயம்! என்று இதனை மிக அழகாக வடமொழிப் பெரியார் கூறியுள்ளார். மிக முதியவர்கள் மிக இளைஞராகிய தலைவரைத் தேர்ந்தடைந்தார்கள் என்றால், இளைஞர்களாகிய நீங்களும் இளைஞராகிய தலைவரைத் தேர்ந்து அடைதல் மிகத் தகுதியாகுமென்பதே நான் இங்குக் கூற வந்தது. இதனால் எனது முன்னுரைக்கு அவ்விளைஞர் தலைவரது வணக்கம் கூறியவாறும் எனது குறிப்பு. அத்தலைவர்தாம் ஆலமர் கடவுளாகிய சர்வாதி குருவாவார். நீங்கள் இதன் முன் மூன்று முறை என்னை அழைத்து அன்பு தந்தீர்கள்; இது நான்காவது முறை என்பது எனது நினைவு. இம்முறையும் உங்களது தொகுதியாகிய அன்பினைத் தந்து, பழங் கிழவனாகிய என்னைக் கைக்கொண்டீர்கள். உங்களது அரும்பெறற் றிருக்கூட்டத்தின் பயனாக அளவில்லாத ஆனந்தமும் இன்பமும் நான் பெற்றதன்றி என்னால் நீங்கள் பெறுகின்ற தொன்றையும் நான் காணேன். "தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச் சங்கரா வார்கொலோ சதுரர்? அந்தமொன் றில்லா வானந்தம் பெற்றேன்; யாதுநீ பெற்றதொன் றென்பால்?" என்னும் திருவாசகம் இங்கு எனது நினைவுக்கு வருகின்றது.



அன்பர்களே! மற்றும் ஒருமுறை எனது மனமார்ந்த நன்றியைச் செலுத்துகின்றேன்.

உங்கள் நாட்டினை எண்ணும்போதெல்லாம் நல்ல நினைப்புக்கள் என் மனதில் தோன்றுகின்றன. இலங்கையை உள்ளிட்ட ஏழு இடங்களைச் சிவபூமிகள் என்றும், சுத்தபூமிகள் என்றும், அண்ட நாடிகளுள் இடகலை பிங்கலை நடுநாடிகள் செல்லும் இடங்கள் என்றும் இவ்வாறு பாராட்டுகின்றார் திருமூலதேவ நாயனார்.

இனி, மாச்சீர் விளச்சீர் - காய்ச்சீர்-கனிச்சீர் முதலிய வளங்களும், ஆறும் - பொழிலும்-கடலும்-குளமும் முதலிய இயற்கை வளங்களும், கடற்றுறையும் தொழிற்றுறையுமாகி விளைக்கும் பெருஞ் செயற்கை வளங்களும், மாடமாளிகை முதலியனவும் நிறைந்து விளங்கும் கண்கவர் சிறப்பும் உங்கள் நாட்டுக்குரியனவாம். இவ்வாறு உள்ள நீர்வளம் குடிவளம் நிலவளங்களாலே நாட்டின் சிறப்பினைக் காண்பதனோடமைவதுவே நம் உலகியல்பு. இவை சிறப்புத்தான். ஆனால், இவற்றைவிடச் சிறந்த பெருஞ் சிறப்புக் கொண்டு நாட்டினை அளந்து காணுங்கள் என்று அருளுகின்றார் ஆசிரியர் சேக்கிழார் பெருமான். திருக்குறிப்புத்தொண்ட நாயனார் புராணத்தினுள் தமிழ் நாட்டு நானிலத் தைந்திணை வளங்களையும் சிவத் தன்மை காட்டும் அருட்டொடர்புபற்றிய, உயிரின் மேம்பாடுதரும், உயர்நிலை பற்றியே காட்டிய திறம் உய்த்துணர்தற்பாலது. அதன்படியே காணும்போது திருக்கேதீச்சரம், திருக்கோணமலை என்ற இரு கண்கள்போன்ற இரண்டு பெரும் பதிகளைக் கொண்டு விளங்கும் பெருமையும், அறுமுகக் கடவுளுடைய அரும் பதியாகிய கதிர்காமம் சிவனது நெற்றிக்கண் போன்ற திருத்தலத்தையுடைய பெருமையும், இவற்றால் உயிருக்கு உறுதி காட்டும் பண்பும் உங்கள் நாடு உடையதாகும். எந்தம் பரமாசாரிய மூர்த்திகளாகிய ஆளுடைய பிள்ளையாரும் ஆளுடைய நம்பிகளும் திருவிராமீச்சரத்தில் இருந்தவாறே உங்கள் நாட்டுத் திருத்தலங்களை உள்ளக் காட்சியிற் கண்டு துதித்தருளினார்கள். இதுபோலவே திருக்

186876-

காளத்தியிலிருந்தபடி வடக்கு நோக்கித் திருக்கயிலாயம், திருக்கேதாரம் முதலிய பெருந் திருத்தலங்களை மனத்துட் கண்டு துதித்த நிலை இங்கு நினைவுகூர்தற்பாலது. "பொருந்திய தேசகால வியல்பகல் பொருள்க ளெல்லா, மிருந்துணர்கின்ற ஞானம் யோகநற் காண்ட லாமே" (சித்தியார்) என்றபடி ஞானயோகக் காட்சியிற் கண்டு அருளிய சிறப்பு இவற்றின் பெருமையை நன்கு விளக்கும்.

"கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமுன் னித்திலஞ்சுமந்து
குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றுங்
கோணமா மலையமர்ந் தாரே"

(ஆளுடைய பிள்ளையார், திருக்கோணமலை-2)

"மாவின்கனி தூங்கும்பொழில் மாதோட்டநன் னகரிற்
பாவம்வினை யறுப்பார்பயில் பாலாவியின் கரைமேற்
றேவன்னெனை யாள்வான்திருக் கேதீச்சரத் தானே"

(ஆளுடைய நம்பிகள், திருக்கேதீச்சரம்-9)

முதலிய திருவாக்குகள் அவர்கள் அகக்கண்ணாற் கண்ட காட்சியை விளக்குகின்றனவன்றோ? ஆளுடைய நம்பிகளுக்கு இப்பதிகத்தை அருளிச் செய்தபோது வடநாட்டுத் திருக்கயிலைச் சாரல் திருக்கேதாரம் அவரது திருவுள்ளத்திற் பொருந்த நினைவுகொண் டருளினர் என்பதும் கருத உள்ளது. "வாழ்வாவது மாயம்மிது" என்ற பதிகம் இதே பண்ணிலும் கட்டளையிலும் அமைந்துள்ளது காண்க. இதேபோன்று அருணகிரிநாதர் கதிர்காமக்கடவுளைப்பற்றி,

"மருவு மடியார்கள் மனதில் விளையாடு
மரகத மயூரப் பெருமாள்காண்"

என்று புகழ்ந்தபோது அங்கு முருகப் பெருமான் அடியார்களது புறக்கண்களுக்குத் தோற்றமளிக்காமல் அகக்கண்ணாலே கண்டுணர்ந்து ஆனந்திக்க நிற்கின்றார் என்பதனை உள்ளே கண்டு பாடியருளினார் என்று கருதலாம்.

அன்பர்களே! இத் திருத்தலங்களை யெல்லாம் பெருவிளக்கங் கண்டு பெருவழிபாடுகள் செய்யும்படி விளங்க வைப்பது சைவப் பெருமக்களின் கடமையாகும்.

இனி, ஸ்ரீமத் ஆறுமுக நாவலர் பெருமானும், மற்றும் பல பேரறிஞர்களும் அவதரித்து நாடுய்ய நல்வழி



காட்டிய பெருமையும் உங்கள் நாட்டுக்குரிய சிறப்பு. உங்கள் நாட்டு மற்றொரு பெரியார் ஸ்ரீமத் இலக்கணம் முத்துக்குமார முனிவர். இவர்கள் சிறுபோதில் இங்குவிட்டகன்றவர்; பின்னை இங்கு வராமலே இறைவன் திருவடியடைந்தனர். இவர்களை உங்கள் நாடும் மறந்துவிட்டது. இவர்கள் சூரியனார் கோயில் ஆதீனத்திற் சார்ந்து பயின்று வடமொழி தென்மொழி இரண்டினிலும் மிக வல்லுநராய் விளங்கியதோடு, முத்தீக்கையும் முறையே பெற்றுச் சைவ சித்தாந்த சாத்திரங்களை அவ்வாதீன முதல்வரிடம் முறையாய்ப் பரம்பரைக் கிரமத்தில் உபதேசிக்கப்பெற்றுப் பெருந் தவமுனிவராய் விளங்கினர். அடியேன்பால் அன்பு பூண்டு, சிவஞானபோதம் சிற்றுரை பேருரைகளை முறையாக உபதேசித்தருளினர். அடியேனது பெரியபுராணப் பேருரைக்குப் பலவகையாலும் பேருதவி புரிந்தருளி வந்தனர். இவர்களது நாடும் நினைவும் எஞ்ஞான்றும் எனது நினைவினுள் வரக்கடவன. இனி, 50, 60 ஆண்டுகளின் முன்னே உங்கள் ஊரார் வைத்தியலிங்கம் பிள்ளை என்பவர் எங்கள் நகரில் நீண்டகாலம் உயர்பள்ளி (காலேஜில்) பேராசிரியராயிருந்தார். அந்த நாளில் பி. எ, முதலிய உயர்தரக் கல்விப் பட்டம் பெற்றவர்கள் எல்லாரும் அவர்களது மாணாக்கர்களே யாவர். அவர் ஒரு பெரிய வீட்டில் வசித்துவந்தார். அதில் குருகுல வாசம்போல எப்போதும் 20, 30 பிள்ளைகள் வசித்தும் வாசித்தும் அவரது மேற்பார்வையில் பயின்று வளர்ந்து வருவார்கள். அடியேனும் எனது பள்ளிச் சிறு வகுப்புகளில் அவரது வீட்டில் பல காலம் தங்கிப் படித்து வந்தேன். அவரது நற்போதனைகளும், ஒழுக்கவழி காட்டும் திறமுமே எனது பிற்காலக் கல்வித் தேர்ச்சிக்குப் பெருந்துணையாய் நின்றன. எனவே, இன்றைய தினம் இவனும் சிறிது கல்வி பயின்றவன் என நீங்கள் மதிக்க உங்கள் முன்னால் அடியேன் நிற்பதற்கு உங்கள் நாட்டுப் பெருமக்களின் கருணையான உதவிகளே பெரும் பங்குபெறுதற்குரியது என்று உறுதி கூறுவேன்.

உங்களையும் உங்கள் நன்னாட்டையும் கண்டு மகிழ்ந்து நலம் பெறுதற் பொருட்டு அடியேனும், என்னுடன் எனது நாட்டினர் பலரும் இங்கு வந்து உங்கள் முழு அன்பையும்

ஆதரவையும் பெற்று மகிழ்கின்றோம்; மேலும் பெற நிற்கின்றோம். அவர்கள் எல்லாருடைய சார்பிலும் எனது நன்றியைச் செலுத்துகிறேன்.

## சைவத்தின் ஆக்கக் குறைவு

இனி, இந்நாளில் சைவ சமய ஆக்கமும் திருநீற்றின் விளக்கமும் குறைந்து வருதலும், உலோகாயதம் முதலாகிய புறச் சமயக் கொள்கைகள் பெருகியும் வரும் கேடான நிலையினைக் கண்டு வருந்தி உங்கள் செயலாளரும், எங்கள் நண்பருமாகிய திரு. வே. சங்கரப் பிள்ளையவர்கள் எனக்கு எழுதிய கடிதம் ஒன்றில் குறித்திருந்தார்கள். அதுபற்றிச் சில வார்த்தைகள் இங்குச் சொல்வது பொருத்தமாகும். எங்கள் நாட்டிலும் இந்நிலை விளைந்து வருகின்றது கண்டு அடியேனும் வருந்தி இறைவரிடம் விண்ணப்பித்ததுண்டு. இவ்வாறு முன்காலத்திலும் நிகழ்ந்ததுண்டு. சமணர் சாக்கியர்களது பொய் மிகுத்தும் வேதவொழுக்கங்கள் அருகியும் அடியார்களிடத்துத் திருநீற்றின் விளக்கம் போற்றப் பெறாமலும் நிகழ்ந்த நிலையினைக் கண்டு, சீகாழியில் சிவபாதவிருதயர் வருந்தித் தோணியப்பர்பால் தவங்கிடந்து வரம் பெற்றனர். பரசமயநிராகரிக்கவும் நீற்றினை ஆக்கவும் வல்ல ஆளுடையபிள்ளையாரைத் திருமகனாராகப்பெற்றனர். அவராற் சைவம் விளங்கி ஓங்கிற்று. பரசமயப் பீடைகள் தொலைந்தன. அதுமுதல் இன்றளவும் நமது நெற்றிகளில் திருநீறு நிகழ்வதென்றால் அதன் பயனேயாகும். அந்நாளில் பாண்டி நாட்டிலே மங்கையர்க்கரசியம்மையார்-குலச்சிறையார் என்னுமிருவர்தம் பாங்குமன்றிச் சைவம் பொருந்தாத நிலையிலிருந்தது. அவர்களும் மன்னவனறியாதபடி தங்களது திருநீற்றினொழுக்கத்தினைக் கொண்டு செலுத்தினர். இத்துணையும் குறைவடைந்திருந்த சைவம் அமணர் எண்ணியபடி அழிவுபெறாமல் மீளவும் தழைத்தோங்கிற்று. அதனை அழிவுபடுத்த எண்ணின புறச் சமயங்கள் தாம் அழிந்தன. திருநீற்றினை எவ்வாறு அழிக்க முடியாதோ, அதுபோலவே பொருட்சமய முதற் சைவ நெறியினையும் அழிக்க முடியாது. என்னை? எனின், இவை உண்மைப் பொருள்கள் எனப்படும் சத்தாந் தன்மை பெற்றன. சிவனருளும் திருஞானசம்பந்த நாயனார் திருநாவுக்கரசு நாயனார் முதலிய பெரியோர் திருவடிகளும்



நமக்குத் துணையாக என்றுமுள்ளன. ஆதலின் "நான் அஞ்சுவதி யாதொன்றுமில்லை; அஞ்ச வருவதுமில்லை" என்பது உறுதி. பின்னை இவர்கள் இவ்வாறு பிதற்றிப் பெருகுகின்றார்களே? என்னில், அஃது அவர்கள் கன்ம வசமாகும். எங்கள் நாட்டில் தமிழ் வல்ல புலவர்களுட் பெரும்பாலோர் உலகாயதக் கூட்டத்தவர்களாகக்காணவும் அவர்களின் கீழ்வரும் மாணவர்களும் அதனாற் கேடுற்றுப் பெருகக் காணவும் உள்ளது நாட்டவர்களது தீயூழ் என்க. இவர்களது கன்மங்களை ஊட்டிக் கழிப்பித்துத் தூய்மை செய்வது இறைவரது நியதியின் கருத்து. அதுபற்றி நாம் வருந்துவதற் கொன்றுமில்லை.

இனிச், சைவம் என்றும், தமிழ் என்றும், வரும் இரண்டு சொற்பொருள்களைப் பற்றிச் சில பேசி, மேற்செல்வேன்.

## சைவம்

சைவம் என்ற சொல் பல பொருள்களில் வழங்கப்படுகின்றது; முதலாவதாகப் புலால்உண்ணாமையைக் குறிக்கச் சைவம் என்று வழங்குதல் எல்லாருக்கும் உடன்பாடாகும். மிலிடேரி உணவுச்சாலை ஒன்றின் விளம்பரப் பலகையின் கீழ் இன்று சைவர் சாப்பாடு என்றெழுதிய மற்றொரு துண்டுப் பலகை தொங்குமானால், அதன்பொருள் இதுதானே. வைணவனும்-பௌத்தம்-சமணம்-இஸ்லாம் - கிறித்துவம் முதலிய சமயக் கொள்கையாளர்களும் எவரும் புலாலுண்ணாமையைக் குறிக்கவேண்டுமானால் அதற்குத் தங்கள் தங்கள் சமயப்பெயரைச் சார்த்தி வைணவச் சாப்பாடு சமணச்சாப்பாடு என்பன முதலாகச் சொல்வதில்லை. எனவே புலால் உண்ணாமை - சீவகாருண்யம்-என்றது சைவத்துக்கே அடிப்படையாக உள்ளது என்ற உயர்ந்த நிலையை எல்லாரும் ஒப்புகின்றனர். இனிச், சைவம் என்பது ஒரு சாதிப் பெயராயும் வழங்குகின்றது. அது புலாலுண்ணாத வழியினர் என்பதனோடமையும். அதன் மேற்பட்டு ஒரு சமயப் பெயராயும் வழங்கக் காண்கின்றோம். "சைவ சமயமே சமயம்" "சைவ முதலாமளவில் சமயமும் வகுத்து" என்பன முதலியவை காண்க. இப்பொருளில் சைவம் என்பது சிவனைக் கடவுளாகக் கொண்டு வழிபடும் கொள்கை என்று பொருள்படும். இனி, இவை எல்லாவற்றுக்கும் மேலாய்ச் சைவம் - சைவன் என்பது சிவ சம்பந்தம் - சிவன் என்ற பொரு

ளில் வழங்கவும் காண்கிறோம். " சைவன் இடம் " (தேவா) "ஐயாறதனிற் சைவனாகியும்" (திருவாசகம்) " வேதாந்தத் தீதில் பொருள் கொண்டுரைக்குநூல் சைவம்" (சித்தி) என்பன முதலிய திருவாக்குக்கள் காண்க. பரங்கருணையாய் ஒளியுருவாய் எங்கு நிறைந்த நிர்க்குண உருவாய் நின்ற பதிப்பொருள் உயிர்களுக்கு அருள்புரியும் கருணை நோக்குடனே சிவமும் சத்தியுமாக வெளிப்படும்; உடலும் கண்ணும் அறிவும் ஒன்றுமில்லாமல் அறியாமையிலே கட்டுண்டு கிடந்த உயிர்களை அருள்தரு கைகொடுத் தெடுத்து, உடலும் அறிவும் தந்து, அவற்றின் அறியாமையைப் போக்கி மலரடிக் கீழ்வைக்கும். இந்நிலைதான் சைவம் எனப்படும்.

சிவாகம சாரமான மெய்கண்ட ஞான சாத்திரங்களின் முடிபு இது. மெய்ப்பொருள் - உண்மைப்பொருள் என்று விதந்து பேசப்படுவதுமிது.

" ஞானத் திரளாய் நின்ற பெருமான் நல்ல அடியார்மேல்
ஊனத் திரளை நீக்கு மதுவு முண்மைப் பொருள்போலும்..."
(பிள்ளையார் - திரு அண் - தேவாரம்)

" தங்குலவு சோதித் தனியுருவம் வந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமு மாட்கொள்வான்
பங்குலவு கோதையுந் தானும் பணிகொண்ட
கொங்குலவு கொன்றைச் சடையான் குணம் பரவி "
(திருவா. பொன்னூசல் 9)

என்பவை முதலிய திருவாக்குக்கள் காண்க. இவ்வாறு ஆட்கொள்ள வரும் சிவம் சைவனாய் வருவான் என்பது, குருவடிவம் கொண்டு பார்வை - உபதேசம் முதலிய தீக்கை வகைகளாலே உயிருக்கு அறிவுபுகட்டித் தன்னை அறிவித்து, அஞ்ஞானத்தைப் போக்கும் சாதனங்களை அருள்புரிவான், உலகமெல்லாம் நிறைந்துள்ளது இச் சிவத்தன்மையாகிய சைவம் என்னும் தத்துவமேயாகும். இதனைத் திருஞானசம்பந்தநாயனார் போதிமங்கையில் சமயவாதம் மேற்கொண்டு அடர்ந்து வந்த பௌத்தர்கள்பால் கருணை நோக்கம் வைத்து உபதேசித்தருளினார். "சைவ மல்லாதுமற் றொன்று மில்லையென்றே...அலகில் கலைப் பொருளுணர்ந்தா ரருளிச்செய்ய" என்றும், " அன்றவர்க்குக் கவுணியர்கோன் கருணைநோக்க மணைதலி லறிவின் மையகன்றுநீங்கி, முன்றொழுது விழுந்தெழுந்து சைவரானார்... னின்றனவுஞ் சரிப்பனவுஞ் சைவமேயாம் நிலைமையவர்க்கருள் செய்து..." என்ற பெரியபுராணத் திருவாக்குகள் காண்க. (திருஞான.புரா - 925-926) இவ்வாறுள்ளகொள்கைகளின் தொகுதியே சைவம். இதனை மறவாமல் உளத்திற்கொண்டு ஒழுகுபவனே சைவன் என்பது உண்மைப் பொருளாம்.



## தமிழ்

இனித் தமிழ் என்பதுபற்றி ஒருசில கருத்துக்களைக் காண்போம். தமிழ் என்பது ஒரு மொழி ; ஓர் உயர்தனிச் செம்மொழி ; தெய்வத் தன்மை பெற்ற மொழி என்பதை ஒவ்வொரு தமிழனும் உணரவேண்டும். சைவனும்உணரவேண்டும். தமிழ்மொழிபற்றிப் பெருமிதமும் கொள்ளவேண்டும். ஆனால் அதுபற்றி வடமொழியையோ பிறமொழிகளையோ தாழ்த்துவதும் வெறுத்தலும் கூடாது. "தமிழ்ச்சொல் வடசொல் எனுமவ் விரண்டும், உணர்த்து மவனை யுணரலுமாமே" "ஆரிய முந்தமி ழும்முட னேசொல்லிக் காரிகையார்க்குக் கருணைசெய்தானே"(திருமந்); "ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்" "தமிழ்ச்சொலும் வடசொலுந் தாணிழற் சேர" (தேவா) என்பன முதலிய திருமுறைத் திருவாக்குக்கள் காண்க. "வேதந் தமிழால் விரித்தார்" "புதிய செந்தமிழ்ப் பழமறை மொழிந்த பூசுரனார்" " எனதுரை தனதுரையாக" முதலிய திருவாக்குக்கள் வடமொழிக்கும் தமிழுக்கும் உள்ள உயர்ந்த பொருத்தங்களைக் காட்டுகின்றன.

இனித் தமிழுக்குத் தெய்வத் தமிழ் என்னும் மற்றோர் சிறப்புமுண்டு. தெய்வத் தன்மையாவது சைவத்தினைப் பற்றி முன்கூறிய கொள்கைகளைப் பெற்றிருக்கும் நிலை. உயிர் - மெய் என்ற எழுத்துப் பாகுபாட்டின் பெயர்களும், பெயர் - வினை - வினையெச்சம் - வினைமுற்று, வினையாலணையும் பெயர் என்ற சொற் பாகுபாட்டின் பெயர்களும், திணைப் பாகுபாடு முதலியவற்றின் பெயர்களும், பிறவும் தமது பெயராலும் அமைப்பாலுமே சைவசித்தாந்தக் கொள்கைகளைப் புலப்படுத்திநிற்பதைக் கண்டுகொள்ளலாம். மொழியானது தன் அமைப்பிலேயே " தெய்வச் சிறப்பும் சிவனடியார் தஞ்சிறப்பும், சைவச் சிறப்பும் " புலப்பட நிற்பது தமிழின் பெருஞ் சிறப்பாகும்.

" உடல்மே லுயிர்வந் தொன்றுவ தியல்பே "
" வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும்"

என்பன முதலிய தமிழ் இலக்கண அமைதிகளை ஞானநூற் கருத்தாகிய கண்கொண்டு பாருங்கள். இவ்வுண்மை விளங்கும். இப்பண்பு வேறு எம்மொழியிலும் காண இயலாது.

இனித், தமிழ் இருவகைப்படும்; அவைதாம், உண்மையறிவித்து இறைவனுக்கு ஆட்படுத்தும் தமிழ் என்பதும், அவ்வாறு ஆட்படுத்தாத வெறுந் தமிழ் என்பதுமாம். தமிழைப் பாராட்டிப் பெருமை பேசுவோர் இதனையும் உடன் உணர்தல் வேண்டும். அந்நிலையேதான் பயன் தரும்.

" வாயிருந் தமிழே படித்தாளுறு
ஆயிரஞ் சமணும் அழிவாக்கினான் "

என்பது இவ்வுண்மையை உபதேசிக்கும் தேவாரமாகிய அருள்மொழி; ஆட்படுத்துந் தமிழ், ஞானத் தமிழ், திருநெறிய தமிழ், தண்டமிழ் என்றெல்லாம் போற்றப்படும். ஏனைய உலகியல் நிலைத் தமிழ் எல்லாம் ஞானத்தமிழுக்குச் சாதனமாக உள்ள அளவே கொள்ளத்தக்கன. அப்படிக்கன்றிச் சமய ஞானம், மெய்ப்பொருள் இவற்றைப் புறக்கணித்து, வடித்துத் தள்ளிய தமிழ்கள் எல்லாம் ஆரவார நீர்மையவாகித் தள்ளத் தகுந்தனவேயாம் என்பது அறிஞர் துணிபும் உண்மையுமாகும். "மறப்பித்துத் தம்மை மலங்களில் வீழ்க்கும் சிறப்பில்லார் தந்திறத்துச் சேர்வை-யற" (போதம்) என்னும் உண்மை, தமிழ்மொழி நிலைக்கும் ஒக்கும்.

சைவர் கடமை

இனிச், சைவர்களது கடமைகளைப்பற்றிச் சிறிது பேசி இவ்வுரையை நிறைவாக்க நினைக்கின்றேன். மறை ஒழுக்கமும், திருநீற்றின் விளக்கமும், சைவர் கூட்டமும் சுருங்கி வருகின்றதும், உலோகாயத முதலிய புறச்சமயக் களைப் பயிர்கள் பெருகி வருகின்றதும் கண்டு, செயலாளர் நமது திரு. வே. சங்கரப் பிள்ளை முதலிய பெரியோர்கள் வருந்துவது பற்றி முன்னே பேசினோம். அஃதுண்மையே. ஆனால் மறுக்க முடியாத மற்றோர் உண்மையுமுண்டு; சைவாதீன கருத்தர்களின் அருள் முயற்சிகளாலும், மற்றும் பல சைவப் பெரியோர்களும் சைவ சபைகளும் செய்யும் நன்முயற்சிகளாலும் முன்னை நாளிலும்விட இப்போது பற்பல சைவப் பத்திரிகைகளும் பிரசுரங்களும் ஆயிரம் பதினாயிரமாகத் திருமுறைகளும் அச்சிட்டு வழங்கப்படுகின்றன; சைவப் பிரசாரகர்கள் பலர் பற்பல ஆயிரமக்களைக்



கூட்டி அவர்களுக்குச் சைவ நல்லறிவு புகட்டி வருகின்றார்கள். இதுவும் உண்மைதான். ஆனால் சைவ ஆக்கமும் திருநீற்றின் விளக்கமும் ஒழுக்கமும் குறைவானேன்? எனில், சர்க்கரை என்றெழுதினாலும் சொல்லக் கேட்டாலும் இனிய சுவை வராது; பாக சாத்திரம் முழுதும் படித்துத் தேர்ந்தாலும் பசி மாறாது. சைவ சாத்திரமும் தோத்திரமும் படித்தல் நன்றுதான். ஆனால் அதுமட்டும் போதிய பலன் தராது. படித்த நிலைகளை ஒழுக்கத்திற் கொண்டு வருதல் வேண்டும். அஃதில்லாமையால்தான் சைவ நன்மக்களின் தொகை குறைகின்றது. சரியை என்பது சைவ சாதனங்களுள் முதற்படியாகும்; "சுத்த சைவத்துக் குயிரதே" என்று சரியையைப் போற்றுகிறார் திருமூலர். சரியையில் நிற்போர் தொகை எவ்வளவு என்பது பாருங்கள். சைவ நன்மக்கள் தத்தம் வீடுகள் தோறும் சிவனுக்கான ஒரு சில பூமரம்-செடி-கொடிகளை வைத்துப் பயிராக்கி அவற்றின் பூக்களை எடுத்துச் சிவனுக்குச் சாத்தலாமே. இது செய்யும் சைவர்கள் எத்தனைப் பேர்? "காலை யெழுந்து கடிமலர் தூயன தாங்கொணர்ந்து", "பறித்த மலர்கொடு வந்துமை யேத்தும் பணியடியோம்", "பூமாலை புனைந்தேத்தேன்" என்பன எல்லாம் நூல்களின் அளவே நிற்குமானால் சைவ ஆக்கம் எங்கே நிகழும்? சைவ நல்லாசாரியரை அடுத்து ஒரு தீக்கையேனும் இரண்டேனும் பெற்றுக்கொண்டு அவருபதேசப்படி திருநீறும் ஐந்தெழுத்தும் பயில்பவர் தொகை எவ்வளவு? "நேய மலிந்தவர் வேடமும் ஆலயந் தானும் அரனெனத் தொழுமே" என்றபடி திருவேடமும் சிவாலயமும் சைவர் மனத்தைக் கவர்கின்றனவா? வெறும் வாய் ஞானத்துடன் நில்லாமல் இவ்வொழுக்கங்கள் வளர வளரவே சைவம் தானே வளரும். முதல் ஆண்டில் அடியேனது தலைமையுரையில் உங்கள் சபையின் பெயரில் "இந்து இளைஞர் மாநாடு" என்றிருந்ததனைச் சைவ இளைஞர் மாநாடு என்று திருத்திக்கொள்ளுதல் பொருந்தும் என்று வேண்டிக்கொண்டேன். அதன் பேரில் சபையில் ஒரு விவாதம் வந்தது. எல்லாரும்ஒருமித்த மனத்துடனே எனது விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டார்கள். இப்போது உங்கள் மாநாடு சைவ மாநாடாகத் திகழ்கின்றது. அதுபோலவே இன்றும் ஒரு வேண்டுகோள்

விடுக்கின்றேன். அஃதாவது, இம்மாநாடு மூன்று நாட்களில் ஒருநாள் காலையில் ஒரு பகுதியை இம்மாநாட்டு மண்டபத்தையே தீட்சா மண்டபமாக்கித் தகுந்த சைவாசாரியார் ஒன்றிரண்டு பேர்களைக் கொண்டு ஆணும் பெண்ணுமாகக் குறைந்தது 100 பேர்களாவது சைவ சமய முதல் தீக்கையேனும் பெற்றுத் திருநீறும் ஐந்தெழுத்தும் திருமுறைப் பாராயணமும் பயிலத் தொடங்குதல் சைவ ஆக்கத்துக்குரிய பெருஞ் சாதனம் என்பதேயாகும். திருவீதிகளில் தமிழ் மறைகளையும் சிவநாமங்களையும் முழக்கிக்கொண்டு நன்னாள்களில் அன்பர்கள் திரண்டு கூடி வலம் வருதல் சைவ ஆக்கத்துக்கு மற்றுமோர் பெருஞ் சாதனமாகும். நமது பரமாசாரியர்கள் அங்கங்கும் தல யாத்திரைகள் செய்து போந்தருளிய நிலைகள் இக்கருத்தைப் பற்றியன. திருவெம்பாவை, குயிற்பத்து, திருத்தசாங்கம் முதலியவற்றின் குறிப்பும்காண்க. கணநாத நாயனார் புராணத்தினுள் ஒரு சிறந்த வழியினைக் காட்டியருள்கின்றார் சேக்கிழார் பெருமான் :—(1) "...விரும்பிவந் தணைவார்க்குத், தூய கைத்திருத் தொண்டினி லவர்தமைத் துறைதொறும் பயில்விப்பார்" (2) "நல்ல நந்தன வனப்பணி செய்பவர் நறுந்துணர் மலர்கொய்வோர், பல்ப ணித்தொடை புனைபவர் கொணர்திரு மஞ்சனப் பணிக்குள்ளோர், அல்லு நண்பக லுந்திரு வலகிட்டுத் திருமெழுக் கமைப்போர்கள், எல்லையில்விளக் கெரிப்பவர் திருமுறை யெழுதுவோர் வாசிப்போர்" (3) "இனைய பஃறிருப் பணிகளி லணைந்தவர்க் கேற்றவத் திருத்தொண்டின், வினைவி ளங்கிட வேண்டிய குறையெலா முடித்துமே விடச்செய்தே, அனைய வத்திறம் புரிதலிற் றொண்டரை யாக்கி..." (4) இங்கு "நிலைபெறுமாறெண்ணுதியேல்", "ஆமாறுன் றிருவடிக்கே" என்பன முதலிய திருவாக்குக்களும், சேரமானாரது வரலாறும் நினைவு கூர்தற்பாலன.

## முடிபு

அன்பர்களே! உங்கள் மாநாட்டின் நன்முயற்சிகள் எல்லாம் சிறந்தோங்கிச் சிவனருள் பெருகச் சாதனமாய் விளங்குக. இதனைச் சார்ந்த எல்லா அன்பர்களும் எல்லா நலங்களையும் பெற்று நீடுவாழ்க. மற்றுமொரு முறை உங்களுக்கு எனது நன்றி. சிவம் - சுபம்.

9. ஒழிபு

# சைவத்தேர்வு வினாக்கள் - 1951

## சைவப் புலவர்

### I. இலக்கியப் பகுதி

நேரம் 3-மணி] [மதிப்பெண் 100

1. 'கடவுள் வாழ்த்து' என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் அறிவுறுத்திய இறைவ னிலக்கணத்தைத் தொகுத்து வரைக.

2. (க) சுவையொளி யூறோசை நாற்ற மென்றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு.
(உ) அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன்பழிப்ப தில்லாயி னன்று.
இக்குறள்களுள் ஒன்றுக்குப் பொருள் கூறிச் சிறப்புரை யெழுதுக.

3. ஞாலத்திற்பெரிது, கடலிற்பெரிது, மலையிற்பெரிது எனக் கூறப்பட்டவற்றை முறையே குறிப்பிடுக.

4. பெற்றம் புலியின் தோல் போர்த்து மேய்தல், புதருள் மறைந்து வேட்டுவன் பறவைகளைப் பிடித்தல் இவை முறையே எவற்றுக்கு உவமையாகக் காட்டப் பெற்றன?

5. எப்பொரு ளெத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.
இதன் பொருளை நன்கு விளக்குக.

6. ஒன்பதாந் திருமுறையாசிரியர்கள் இன்னாரெனக் குறிப்பிடுக.

7. 'திருவிடைக் கழி' என்ற தலத்திற்குரிய திருப்பதிகம் எந்தத் தெய்வத்தைக் குறித்துப் பாடப் பெற்றது? இத்திருப் பதிகத்தைச் சைவத்திருமுறைகளிற் சேர்த்தது பொருத்தந் தானா? ஆராய்க.

அல்லது

"அம்பளிங்கு பகலோன் பாலடைப் பற்றாயிவள் மனத்தின்
முன்பளிந்த காதலுநின் முகந்தோன்ற விளங்கிற்றால்"
இத்தொடர்ப் பொருளைத் தெளிவு படுத்துக.

8. "தத்தையங் கனையார் தங்கள் மேல்வைத்த
தயாவை நூறாயிரங் கூறிட்டு
அத்திலங் கொருகூ றுங்கண் வைத்தவருக்கு
அமருல களிக்குநின் பெருமை"
இத்திருப் பாடலைப் பாடிய ஆசிரியர் யாவர்? இத்தொடரின் பொருளை விளக்குக.

9. " பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே பல்லாண்டு கூறு துமே " இதன் நயத்தினைப் புலப்படுத்துக.

10. ' பதிபசு பாச மெனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசு பாச மனாதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கிற்பசு பாச நில்லாவே '

இதற்குப் பொருள் கூறுக.

11. சீவன் சிவத்து ளடங்குதற்குத் திருமூலர் கூறிய உவமை யாது ?

12. ஆற்றுப்படையின் இலக்கணங் கூறித் திருமுருகாற்றுப் படையின் பொருள் அமைதியைப் புலப்படுத்துக.

13. முருகப்பெருமான் திருச்சீரலைவாய்க்குச் செல்லும் இயல் பினையாவது திருவாவினன்குடியில் எழுந்தருளிய இயல் பினையாவது சுருக்கி வரைக.

14. குறமகள் முருகாற்றுப்படுத்து முறையினைக் குறிப்பிடுக.

15. மணலாற் சிறுவீடு கட்டி விளையாடும் இளம் பருவத்திலேயே சிவபெருமான்பாற் பேரன்புடையவர் காரைக்காலம்மையா ரென்பதற்கு அற்புதத் திருவந்தாதியிலிருந்து அகச்சான்று தருக.

16. சிவபெருமானை நோக்கித் தமக்குக் கண்ணெதிரே திருவுரு வத்துடன் தோன்றி யருள்புரிதல் வேண்டும் எனக் காரைக் காலம்மையார் வேண்டும் முறையினைக் குறிப்பிடுக.

17. காலை, பகல், மாலை, இரவு என்னும் இப்பொழுதுகளின் தோற்றமுழுவதும் சிவபெருமான் திருமேனியில் ஒருங் கமைந்த இயல்பினை அம்மையார் எங்ஙனம் பாராட்டுகின்றார்?

18. ' இனையதொரு பழமின்னும் உளததனை இடுக ' இதுயார் கூற்று ? சந்தர்ப்பங் கூறுக.

19. புனிதவதியார்க்கு அம்மையார் எனும் பெயர் வழங்குதற் குரிய காரணமென்னை ?

20. அம்மையார் கயிலைப் பெருமான்பால் முடிவாகத் தெரிவித் துக்கொண்ட வேண்டுகோள் யாது ?

---



## II. சாத்திரப் பகுதி

நேரம் 3-மணி] [மதிப்பெண் 100

1. சிவஞானபோதநூல் தோன்றிய வான் முறையினைச் சுருக்கி வரைக.

2. சிவஞானபோதம் எத்தனை இயல்களாக வகுக்கப் பெற்றுள்ளது ? இயலமைப்பினை விளக்குக.

3. அவையே தானே யாயிரு வினையிற்
போக்கு வரவு புரிய ஆணையின்
நீக்க மின்றி நிற்கு மன்றே.

இச் சூத்திரப் பொருளைத் தொகுத்தெழுதுக.

4. உடம்பின் வேறாய் உயிர் உண்டு என்பதற்கு மெய்கண்டார் கூறுங் காரணங்களைக் குறிப்பிடுக.

5. சத்து, அசத்து என்பவற்றுக்குரிய இலக்கணத்தினைக் குறிப் பிட்டு விளக்குக.

அல்லது

' ஐம்புலவேடரின் அயர்ந்தனை ' யெனத் தொடங்குஞ் சூத் திரப் பொருளை விரித்துரைக்க.

6. சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடனாதல்
சார்ந்தாரைக் காத்துஞ் சலமிலனாய்ச்—சார்ந்தடியார்
தாந்தானாச் செய்துபிறர் தங்கள்வினை தான்கொடுத்தல்
ஆய்ந்தார்முன் செய்வினையும் ஆங்கு.

இவ்வுதாரண வெண்பா எதன்பொருட்டுக் கூறப்பட்டது ? பொருள் கூறி விளக்குக.

அல்லது

இருவினை யொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் எனவழங் கும் இத் தொடர்களின் பொருளைத் தெளிவு படுத்துக.

7. " அரனடிக் கன்பர்செய்யும் பாவமும் அறமதாகும்
பரனடிக் கன்பிலாதார் புண்ணியம் பாவமாகும் "

இவ்வுண்மையை வலியுறுத்தற்குரிய வரலாறுகளைக் குறிப் பிடுக.

8. " நவந்தரு பேதம் ஏகநாதனே நடிப்பன் என்பர் "
நவந்தரு பேதமாவன யாவை ?

9. ஆணவ மலத்திற்கும் மாயைக்கும் உள்ள வேறுபாட்டினை அருணந்திதேவர் எங்ஙனம் விளக்குகின்றார்?

10. சைவத்திறத் தடைந்தோர் சிவனடியைச் சேர்தற்குரிய மார்க்கங்கள் யாவை? அவற்றினியல்பினைச் சுருக்கி வரைக.

அல்லது

சீவன் முத்தர்க்குரிய இயல்பினை விளக்குக.

11. திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் என்னும் இரு நூல்களுக்கு முள்ள தொடர்பினை விளக்குக.

12. "கண்டத்தைக் கொண்டு கருமம் முடித்தவர்
பிண்டத்து வாராரென் றுந்தீபற
பிறப்பிறப் பில்லையென் றுந்தீபற."

இதன் பொருளைத் தெளிவு படுத்துக.

அல்லது

"பற்றை யறுப்பதோர் பற்றினைப் பற்றில்அப்
பற்றை யறுப்பரென் றுந்தீபற
பாவிக்கில் வாராதென் றுந்தீபற"

இப்பாடற்குப் பொருள் கூறி இக்கருத்தமைந்த திருக்குறளை யெடுத்துக் காட்டி விளக்குக.

13. ஆசிரியரின்றி நூல்களைக் கற்பதாற் பயனில்லை யென்பதனைத் திருக்களிற்றுப்படியார் நூலாசிரியர் எவ்வாறு விளக்குகின்றார்?

14. மெல்வினை, வல்வினை என்பவற்றின் இயல்புரைத்து உதாரணந் தருக.

அல்லது

திருக்களிற்றுப் படியாரில் திருக்குறள் எடுத்தாளப் பெற்ற இடங்களுள் ஒன்றைக் குறிப்பிடுக.

15. கண்ணப்பர், சேந்தனார், மங்கையர்க்கரசியார் ஆகிய அடியார்களின் அன்பின் திறத்தை விளக்குக.

---

உ

சிவமயம்

கர௵ புரட்டாசி௴ ௧௩௳ (29-9-1951) மாலை 5 மணிக்கு, குன்றக்குடி, திருவண்ணாமலை ஆதீனமடத்தில் கூடிய சைவ அன்பர்கள் கூட்டத்தில் சைவ சித்தாந்த மகா சமாஜ ஆண்டு விழாவைக் குன்றக்குடியில் டிசம்பர் மாதத்தில் நடத்துவதற்காகக் குன்றக்குடி, திருவண்ணாமலை ஆதின சின்னப்பட்டம், ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக சுவாமிகள் அவர்கள் திருவுளப்படி கீழ்க்கண்ட வரவேற்புக் குழு, ஆலோசனைக் குழு அமைக்கப்பெற்றன.

## வரவேற்புக் குழு

### தலைவர் :

திரு. க.வீ.அழ.மு.இராமநாதன் செட்டியார், கோட்டையூர்

### துணைத்தலைவர்கள் :

திரு. அ.இராமச்சந்திரன் பிள்ளை, B.A., B.L., திருப்புத்தூர்
திரு. சா. கணேசன், காரைக்குடி

### அமைச்சர், பொருளாளர் :

திரு. குமு. சு. சுப்பிரமணியன், எம்.ஏ., பலவான்குடி

### துணை அமைச்சர்கள் :

திரு. வீர.சா.மெய்யப்ப செட்டியார், பி.ஏ.,பி.எல்., புதுவயல்
திரு. இராம. கண்ணய்யா, குன்றக்குடி

உறுப்பினர்கள் :

திரு. கி.கரு.ராம.சுவாமிநாதன் செட்டியார், தேவகோட்டை
,, சோம. நாராயணன், தேவகோட்டை
,, ராம. ப. மெ. சொக்கலிங்கம் செட்டியார், காரைக்குடி
,, முத்த. வெ. சொக்கலிங்கம் செட்டியார், காரைக்குடி
,, பழ. நா. நாராயணன் செட்டியார், நேமத்தான்பட்டி
,, கா. அரு. கா. காடப்ப செட்டியார், ஆத்தன்குடி
,, நா. அருணாசலம், கண்டவராயன்பட்டி
,, சொ. மு. ராம. இராமசாமி செட்டியார், பள்ளத்தூர்
,, S. சோலைமலை அம்பலம், கொத்தரி
,, தெ. பழ.சித. சதாசிவச் செட்டியார், கொத்தமங்கலம்
,, நா. வயி. ரெங்கநாதன், புதுவயல்
,, அரு. உ. வீர. அழகப்பச் செட்டியார், புதுவயல்
,, அருணாசலம் அம்பலம், கோட்டையூர்
,, T. S. கிருஷ்ணசாமி ஐயர், இளையாத்தன்குடி
,, S. சோமசுந்தரஞ் செட்டியார், பாரிஸ்டர், செவ்வூர்
,, பழ. ப. பழநியப்ப செட்டியார், கோனாபட்டு
,, வீர. சுப்பையா பிள்ளை, திருப்புத்தூர்
,, பெரி. பெரி. சுப. பெரியகருப்பன் செட்டியார், கண்டரமாணிக்கம்
,, சி. காசிவிசுவநாதன் செட்டியார், கல்லல்
,, பி. சுந்தரக் குருக்கள், குன்றக்குடி
,, புன்னைவனம், குன்றக்குடி

## ஆலோசனைக் குழு

திரு. உ. ராம. மெ. சுப. சேவு. மெய்யப்பச் செட்டியார், தேவகோட்டை
,, ப. வ. ராம. குழந்தையன் செட்டியார், இராயவரம்
,, க. வெ.ராம. அழகப்பச் செட்டியார், கானாடுகாத்தான்
,, மு. காசிவிசுவநாதன் செட்டியார், பாகநேரி
,, அழ. அரு. சோமநாதன் செட்டியார், தேவகோட்டை

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சென்னை சைவ சித்தாந்த மகா சமாஜம்

## 46-வது ஆண்டு நிறைவுவிழா, குன்றக்குடி

# சைவர் மாநாடு

" வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே "

பேரன்புடையீர்,

நிகழும் கர ஆண்டு, மார்கழித் திங்கள், எ, அ, கூ (சனி, ஞாயிறு, திங்கள்) நாட்களில் (22-12-51, 23-12-51, 24-12-51) சென்னை சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் **46-ஆவது ஆண்டு நிறைவு விழாவும், சைவர் மாநாடும்**, குன்றக்குடி - திருவண்ணாமலை ஆதீனத்தின் கொலு மண்டபத்தில் அடியிற்கண்ட நிகழ்ச்சிமுறைப்படி நடைபெறும்.

அவ்வமயம் **உயர்திரு. ஓமந்தூர் - P. இராமசாமி ரெட்டியார்** அவர்கள் தலைமை வகிப்பார்கள்.

அண்ணாமலைநகர் **திருமதி. S. இராஜேசுவரி அம்மையார்** சைவ மங்கையர் மாநாட்டில் தலைமை வகிப்பார்.

பள்ளத்தூர் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் - **திரு. முத்து வெங்கடாசலமய்யர்** சைவ இளைஞர் மாநாட்டில் தலைமை வகிப்பார்.

தேவகோட்டை தமிழ் வள்ளல் - சைவ சித்தாந்தப் புரவலர்-திரு. உ. ராம. மெ. சுப. சேவு. மெய்யப்ப செட்டியார் அவர்கள் சைவர் மாநாட்டைத் திறந்து வைப்பார்கள்.

மதுரை ஸ்ரீ மீனுட்சி மில்ஸ் டைரக்டர் – திரு. தி. சுந்தரம், B.Com., அவர்கள் சைவ இளைஞர் மாநாட்டையும், சென்னை – திருமதி. க. ர. ஆதிலட்சுமி அம்மையார் அவர்கள் சைவ மங்கையர் மாநாட்டையும் தொடங்கி வைப்பார்கள்.

தாங்கள் உற்றார் உறவினருடன் வந்திருந்து மாநாட்டைச் சிறப்பிக்கும் வண்ணம் வேண்டிக்கொள்கிறோம்.

க. அரங்கசாமி,
சமாஜப் பொதுச் செயலாளர்

கும. சு. சுப்பிரமணியன், M.A.,
வீர. சா. மெய்யப்பன், B.A.,B.L.,
இராம. கண்ணப்பா

---

## நிகழ்ச்சி முறை

கர ஆண்டு, மார்கழி எ௨ (22-12-51) சனிக்கிழமை

### சைவர் மாநாடு

முற்பகல் 7 மணி தலைவர் ஊர்வலம்.
7-30 ,, திருக்கோயில் வழிபாடு.
8-15 ,, கொடியேற்று விழா—தலைவர்.
8-30 ,, ஆதீனபூஜை தரிசனம்.
10—12 ,, கடவுள் வணக்கம்.

வரவேற்புரை—திருவாளர் K. V. AL. M. இராமநாதன் செட்டியார் அவர்கள், கோட்டையூர்—'திறப்புப் பேருரை.'

வாழ்த்துரை-திருவண்ணாமலை ஆதீனம் திருப் பெருந்திரு. மகாசந்நிதானம் அவர்கள்.

ஆதீன ஸ்தாபகர் உருவப்படத் திறப்பு—திரு. சா. கணேசன் அவர்கள், காரைக்குடி.

ஆண்டு அறிக்கை படித்தல்—சமாஜச் செயலாளர் ; தலைவர் தொடக்க உரை.

பிற்பகல்

3-30—4-30 மணி கடவுள் வணக்கம், தலைமைப் பேருரை.
4-30—5-30 ,, திரு.S. சுந்தரேசஞ் செட்டியார், B.A.,L.T., செயலாளர், சிவனடியார் திருக்கூட்டம், குடந்தை—'நமது பணி.'
5-30—6-30 ,, பாலகவி திரு. வயிநாகரம் வே. இராமநாதன் செட்டியார், தேவகோட்டை —'முன்னேற்றம்.'
6-30—7-30 ,, புலவர் திரு. முருகவேள், B.O.L., தமிழாசிரியர், முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளி, சென்னை —'மாணிக்கவாசகர் புலமை மாட்சி.'
7-30—8-0 ,, தலைவர் கருத்துரை.

மார்கழி அ௨ (23-12-51) ஞாயிற்றுக்கிழமை

### சைவ இளைஞர் மாநாடு

முற்பகல்

9 —9-30 மணி கடவுள் வணக்கம், தொடக்க உரை.
9-30—10-15 ,, தலைமை உரை.
10-15—11-0 ,, வித்வான் - திரு. அ. நவநீதகிருஷ்ணன், தமிழாசிரியர், இந்து கல்லூரி, திருநெல்வேலி —'வள்ளுவரும் கடவுட் கொள்கையும்.'
11-0—11-45 ,, வித்வான் - திரு. வை. சு. தண்டபாணி, தமிழாசிரியர், உயர்நிலைப்பள்ளி, இராங்கியம் —'அறிவும் அனுபவமும்.'
11-45—12-30 ,, திரு. VR. S. மெய்யப்பன், B.A., B.L., வழக்குரைஞர், தேவகோட்டை—'இளைஞரும் சமயமும்'
12-30—1-0 ,, தலைவர் கருத்துரை.
பிற்பகல் 3—4 ,, சமாஜ செயற் கூட்டம்.

### சைவ மங்கையர் மாநாடு

4—5 மணி கடவுள் வணக்கம், தலைமை உரை.
5—5-45 ,, வித்வான் திருமதி. கரும்படுசொல்லி, திருவையாறு—'சைவம் காத்த மங்கை.'

5-45—6-30 ,, புலவர் - திருமதி. குழந்தை, தமிழாசிரியை, நிர்மலா கல்லூரி, கோவை—'அம்மையின் அருந்தமிழ்.'

6-30—7-15 ,, திருமதி. உ. தெய்வயானை, கலைமணி வகுப்பு மாணவி, காரைக்குடி—'சேக்கிழார்கவியின் செவ்விய இன்பம்.'

7-15—8-0 ,, தலைவர் கருத்துரை.

9-30 ,, இசையரங்கு—சங்கீத பூஷணம் - திரு. பி. சுவாமிநாதன் குழுவினர், தருமபுரம்.

மார்கழி கூ (24-12-51) திங்கட்கிழமை

## சைவர் மாநாடு

முற்பகல் 9—10 மணி கடவுள் வணக்கம்

திரு.மா. சிவகுருநாத பிள்ளை, சண்முகானந்த பாடசாலை, சுந்தரப்பெருமாள்கோயில்—'சிதைவுற்ற சிவாலயங்கள்.'

10—11 ,, திரு. P. R. சுவாமிநாதன், M.A., L.T., தலைமை ஆசிரியர், அண்ணாமலைநகர்—'நால்வரும் நாமும்'

11—12 ,, வித்வான் - திரு. அ. நடேச முதலியார், தமிழாசிரியர், லால்குடி—'சைவமும் சங்க இலக்கியமும்.'

12—12-30 ,, தலைவர் கருத்துரை.

பிற்பகல் 4—5 ,, திரு. S. மீனாட்சிசுந்தரம், B.A., L.T., கலைமகள் கல்விநிலைய ஸ்தாபகர், ஈரோடு—'ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியன்.'

5—6 ,, திரு. அ. ச. ஞானசம்பந்தம், M.A., தமிழ்ப் பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை—'வேண்டாவோ.'

6—7 ,, தலைவர் முடிவுரை.

7—8 ,, ஆசீர்வாதப் பேருரை.

8—8-30 ,, நன்றி கூறல், கடவுள் வாழ்த்து.

---

குறிப்பு :—குன்றக்குடிக்குக் காரைக்குடி [illegible] இந்த இரண்டு ஸ்டேஷன்களில் இறங்கி வரலாம் [illegible] தான். பஸ் வசதி உண்டு.

சாது அச்சுக்கூடம், சென்னை

186876

7. குறித்தபடி மணியார்டர்செய்து அடுத்த ஆண்டுக்குச் சமாஜ அங்கம்வகித்துப் பத்திரிகை பெற விரும்பாமலோ, அல்லது முடியாமலோ இருப்போர், தயைகூர்ந்து மூக்காலணா கார்டு மூலம் நமக்கு அறிவித்துவிட்டால் சமாஜத்துக்குப் பொருள் நஷ்டமும் கஷ்டமும் விளையா. பத்திரிகை பெற விரும்பாதாரும், இயலாதாரும் தயைசெய்து தெரிவித்தலாகிய உபகாரத்தையேனுஞ் செய்வார்களாக.

8. ஒவ்வொரு சந்தாதாரரும் தமது திருத்தமான தபால் விலாசத்தைச் செவ்வையாக எழுதி உடனே அனுப்ப விரும்புகிறேன்.

இங்ஙனம் : செயலாளர்.

---

# மதிப்புரை

**1. அற்புதக் கனி :** ஆசிரியர் ஆர். பஞ்சநதம் பிள்ளை, தமிழாசிரியர், திருச்சி. விலை ரூபாய் 1—8—0. கிடைக்குமிடம் T. G. கோபால் பிள்ளை, பதிப்பாளர், தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி.

இவ்வினிய நூல் காரைக்கால் அம்மையார் அருளிச்செய்த அற்புதத் திருவந்தாதியின் விளக்கம் ஆகும். திருச்சிராப்பள்ளி வானொலியில் இதன் ஆசிரியர் பேசிய பேச்சுக்களின் தொகுதியாகும். அம்மையார் அருளிய அற்புதக் கருத்துக்களைப் பாமரமக்களும் அறிந்து சுவைத்து இன்புறும் வகையில் இனிய எளிய தமிழ் நடையில் எழுதி இருக்கின்றனர். இதனைத் தமிழ்மக்கள் அனைவரும் போற்றுவார்களாக.

# செய்தித் திரட்டு

*19—11—51* **மாணவர் பேச்சுப் போட்டி :** கோவை கோபால் பார்க்கில் பலதிறப்பட்ட கல்லூரி மாணவர்கள் 'மக்கட் பெருக்கக் கட்டுப்பாடு நமது நாட்டுக்கு அவசியமா?' என்பதைப் பற்றி விவாதித்தார்கள். சிறந்த பேச்சாளர் இருவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. இக்கட்டுப்பாட்டைக் குறித்துச்சமயம் என்ன கூறுகிறது? என்பதைப் பற்றி வெகு சுவையுடன் வாதம் செய்தார்கள். இக்கட்டுப்பாட்டைப் பற்றிச் சைவம் என்ன சொல்லுகிறது? என்று அன்பர்கள் ஆராய்வார்களாக.

*8—12—51* **சிரவணபுரம் கௌமார மடாலயம் :** தவத்திரு கந்தசாமியாரின் மூன்றாவது குருபூஜை. இன்னிசை, ஆராதனை, அறிஞர் சொற்பொழிவுகள் நடைபெறும். கௌமார மடாலயம் கொங்கு நாட்டில் மிகவும் புகழ்பெற்ற ஒரு மடாலயம்.

## சமாஜ அங்கத்தவர் கூட்டம்

சென்னை, இராயப்பேட்டை, ஸ்ரீபால சுப்பிரமணிய பக்தஜன சபையில் 1951 டிசம்பர் 15-ம் நாள் சனிக்கிழமை மாலை 4 மணிக்கு, ஆண்டு வரவு செலவுக் கணக்கைப் பரிசீலனை செய்யச் சமாஜ அங்கத்தவர் பொதுக்கூட்டம் நடைபெறும். அன்று கூட்டத்துக்கு வேண்டிய போதிய நிறைவு எண் (Quorum) இல்லாவிட்டால் அன்று ஒத்திவைக்கப்பட்ட அங்கத்தவர் கூட்டம் மறுநாள் 16 - 12 - 1951 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு அதே இடத்தில் கூடி, ஆண்டு வரவு செலவுக் கணக்கைப் பரிசீலனை செய்யும். அங்கத்தவர் யாவரும் வரவேண்டும்.

— செயலாளர்

## சமாஜ விதிகளில் திருத்தம்

1951 நவம்பர் 25-ம் நாள் சென்னை, இராயப்பேட்டை ஸ்ரீபாலசுப்பிரமணிய பக்தஜனசபையில் நடந்த ஒத்திவைக்கப்பட்ட அங்கத்தவர் பொதுக்கூட்டத்தில் சமாஜ விதிகளைத் திருத்துவதற்கான கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

I சமாஜ விதிகளில் 14-வது விதியில் "ஓராண்டு நிறைவு விழாவில் முதல் நாள் தலைமை வகிப்பவர் அடுத்த ஆண்டு நிறைவு விழாவரை சமாஜத்தின் தலைவர் ஆவார்" என்னும் வாக்கியத்தை நீக்கிவிடத் தீர்மானிக்கப்பட்டது.

II மேற்படி 14-வது விதியில் நான்காவது வாக்கியத்தை "அவரும் (வரவேற்புக் காரியதரிசி), தலைவரும், ஓர் உதவித் தலைவரும், பத்திராசிரியரும் நீங்கலாக ஏனைய நிர்வாக சபையினர் சென்னை வாசிகளாயிருத்தல் வேண்டும்" என்று திருத்தியமைக்கத் தீர்மானிக்கப்பட்டது.

## சைவப் புலவர் தேர்வு

1951 டிசம்பர் 2-ம் நாள் நடந்த சைவப் புலவர் தேர்வில் வெற்றி பெற்ற அன்பர்கட்கு அறிவிக்கப்படும். அவர்கள் தங்கள் பத்திரங்களை (Certificates) மகாநாட்டில் பெற்றுக்கொள்ளலாம். வர இயலாதவர்கள் தெரிவித்தால் அவர்களுக்கு அவற்றைத் தபாலில் அனுப்பப்படும்.

Printed at the Sadhu Press, 15, Ganapathi Mudali Street, Royapettah by V. Rajammal, (P I. Card No. M. S. 115) Edited and Published by C. M. Ramachandran Chettiar, B.A., B.L., for the Saiva Siddhanta Maha Samajam, at 40, Muthiah Mudali Street, Vellala Teynampet, Madras-6, P.I.Card No. M. S. 81.